वैदिक धर्म वर्धिनी
வைதிக தர்ம வர்த்தினீ

மலர் 3]   ஆசிரியர் : ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா   [இதழ் 11



1759.
XX.A.10.

ஸ்ரீ வரலக்ஷ்மீ

ஸ்ரீ வரலக்ஷ்மீ, ஜன்மாஷ்டமீ, விநாயக சதுர்த்தீ பூஜா
தத்துவங்களும் உபாகர்ம ஸங்கல்பமும் அடங்கிய
விக்ருதி௵ ஆவணிமீ விசேஷ அநுபந்தம்

விலை 6 அணா   வருஷ சந்தா ரூ. 3-[illegible]

காரியாலயம்: 2/218, தம்புசெட்டி தெரு, சென்னை 1.



1757

அன்பளிப்பு

XX. A. 10. 3

வைதிக தர்ம வர்த்தினீ

மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-600090.

यतो धर्मः ततः कृष्णः यतः कृष्णः ततो जयः

1759

धर्म एव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः

மலர் 3] விக்ருதி௵ ஆவணி௴ [இதழ் 11

விக்ஞாபனம்

பல நாட்களாக அநேகம் அன்பர்களும், நாங்களும் எண்ணிய கைங்கர்யம் இந்த மாதம் தான் பூர்த்தியானது. மற்ற விஷயங்கள் எல்லாவற்றையும் நிறுத்தி இம்மாத பத்ரிகையில் கீழ்கண்ட விஷயங்கள் ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன:—

1. பூஜையில் தெரிந்து கொள்ள வேண்டிய பற்பல அரிய விஷயங்கள்.
2. ஸ்ரீவரலக்ஷ்மீ பூஜா தத்வம்-லக்ஷ்மீ கடாக்ஷம் பெறும் வழி-வரலக்ஷ்மீ வ்ருதம் உண்டான உபாக்யானம்-வரலக்ஷ்மீ பூஜாகல்பம்.
3. உபாகர்மா - காமோகார்ஷீத் ஜப, காயத்ரீ ஜப, மஹாஸங்கல்பங்கள் - ஜபவிதி.
4. கோகுலாஷ்டமி தத்வம் - க்ருஷ்ண சரிதத்தில் சில ரஹஸ்ய அர்த்தங்கள் - பூஜா கல்பம்.
5. விநாயக சதுர்த்தி - தத்வம் - விநாயக அவதாரங்கள். விநாயகரின் பெருமை - பல அரிய விஷயங்கள் பூஜாகல்பம்.

பூஜா கல்பங்களை தமிழில் எழுதுவது ஸரியில்லைதான். ஆனால் முழுவதும் ஸம்ஸ்க்ருதத்தில் போட்டால் சிலருக்குத் தான் தெரியும். க்ரந்தமும் அப்படியே. தவிர, நம் அச்சாபீஸில் அவ்வளவுக்கு வஸதி இல்லை. நம் பத்ரிகையைப் படிப்பவர்கள் எல்லோரும் சிறிது விஷய ஞானம் உள்ளவர்களே. சிலர் மஹாபண்டிதர்கள். ஆத்ம ஜ்யோதியை அடைய நாங்கள் காண்பிப்பது சிறிய வெளிச்சமே. நாமும் எவ்வளவோ வருஷங்களாய் இப்பூஜைகளை செய்து வருகிறோம். பல இடங்களில் ஸ்த்ரீகளே நம் பத்ரிகையை ஆதரிப்பவர்கள். அவர்களி

மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

டமே நமது வைதிக தர்மம் வேர் ஊன்றி இருக்கிறது. இரண்டொரு முறை பூஜா கல்பங்களை முன்பாகவே படித்துக்கொண்டால், பூஜை செய்யும்போது ஸ்ரமம் இருக்காது.

பூஜை முறையில் பல மாறுபாடுதல்கள் இருக்கலாம். எங்களுக்குத் தெரிந்த ஒரு முறையைப் பின்பற்றியிருக்கிறோம். குற்றங்கள் ஏதாவது இருக்குமானால் அதை க்ஷமித்து, குணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

இந்த இதழை ஆசார்ய பாத கமலங்களில் பக்தி ஸ்ரத்தையுடன் ஸமர்ப்பிக்கிறோம். அன்பர்கள் அரிய விஷயங்களின் மேன்மையை ஆமோதித்து ஆசிர்வதிக்கவேண்டும். உசிதம் என்று தோன்றினால், பல நண்பர்களும் இதனால் ப்ரயோஜனம் அடையும்படி செய்து, இந்த தர்மஸேவையில் சிறிது பங்கு எடுத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் ப்ரார்த்திக்கிறோம்.

புரட்டாசி மாதத்துடன் மூன்றாவது ஆண்டு பூர்த்தியாகின்றது. அன்பர்கள் முன்போலவே ஆதரிக்க வேண்டுகிறோம்.

ஐப்பசி மாதம் முதல் இன்னும் பல புதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டு, உருவில் மாறி எல்லோர் மனதையும் கவரும்படி வெளிவரும் என்பதை இப்பொழுதே ஸூசகம் செய்கிறோம்.

கரூர், தஞ்சை, பம்பாய், பூனா முதலிய இடங்களில் புதியதாய் சேர்ந்த நண்பர்கள் தங்கள் சந்தாபணத்தை கூடிய சீக்கிரம் அனுப்ப மறுமுறை ஞாபகப்படுத்துகிறோம்.

18 புராண ப்ரவசன க்ஞான யக்ஞம்

(மதுரை ஜில்லா) சின்னமனூரில் 9-7-50 முதல் 26-7-50 வரை 18 நாட்கள் அதி விமரிசையாய் நடைபெற்று முடிந்தது. அந்தரங்க அன்புடன் ஆதரித்த ஆஸ்திக சிகாமணிகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

2-8-50 முதல் ராமனாதபுரம் ஸ்ரீசங்கரஜயந்தி கமிட்டியின் ஆதரவில் ஒரு நவாஹம் ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் நன்றாய் முடிவு பெற்றது. அன்பர்களுக்கு எங்கள் நன்றி.

பழனியிலும் ஆரம்பிக்கப்பட்டு, அதிவிமரிசையாய் நடைபெற்று வருகிறது.

ராமேஸ்வரத்திலும் மற்றும் பல இடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லாவித பெருமையும் கௌரவமும் நம் ஆசிரியருக்கு அளிக்கப்பட்டு வருவது உங்களுடையதே. பத்ரிகை படிக்கும் எல்லோருக்கும் அவரை நேரில் கேட்கும் பாக்யம் கிட்டுமா?

டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090

பூஜை—பொது விஷயங்கள்

குறிப்பு : முதலில் எல்லாவற்றையும் இரண்டொரு முறை நன்கு படித்தால், வேண்டிய ஸாமக்ரியைகளை எடுத்து வைத்துக்கொண்டு பூஜை செய்ய ஸௌகர்யமாய் இருக்கும்.

ஆரம்பத்தில் விநாயக பூஜையும் ஸங்கல்பமும் எல்லா பூஜைகளுக்கும் பொதுவானது.

ஸங்கல்பம் : ஶுக்லாம்பரதம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்புஜம். ப்ரஸன்ன வதனம் த்யாயே ஸர்வ விக்ன உபஶாந்தயே.

ஓம். பூ :—ஸுவரோம். மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷய த்வாரா ஸ்ரீ பரமேஶ்வர (ஸ்ரீமன் நாராயண) ப்ரீத்யர்த்தம் கரிஷ்ய மாணஸ்ய கர்மண: அவிக்னேன பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ மஹா கணபதி பூஜாம் கரிஷ்யே.

(என ஸங்கல்பம் செய்து, கை அலம்பி, மஞ்சள் விக்ரஹத்தில் விக்நேஶ்வரரை ப்ரதிஷ்டை செய்து ஷோடசோபசார பூஜை செய்யவேண்டும். வேதம் அறிந்தவர் 'கணானாம் த்வா' என்ற மந்த்ரம் கூறி ஆவாஹனம் செய்யவேண்டும்.)

அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஸுமுகம் விக்நேஶ்வரம் த்யாயாமி. ஆவாஹயாமி ஆஸனம் ஸமர்ப்பயாமி (அக்ஷதை போடவும்) பாதயோ: பாத்யம் ஸமர்ப்பயாமி, ஹஸ்தயோ: அர்க்யம் ஸமர்ப்பயாமி. ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (தனிபாத்திரத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உத்தரிணி தீர்த்தம் விடவும்). ஸ்நாபயாமி. (புஷ்பத்தை தீர்த்தத்தில் தோய்த்து ப்ரோக்ஷிக்கவும்). ஸ்நானானந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி. கந்தான் தாரயாமி (சந்தனம் இடவும்) கந்தஸ்யோபரி அக்ஷதான் ஸமர்ப்பயாமி. புஷ்பை: பூஜயாமி (அர்ச்சனை). ஸுமுகாய நம: ஏகதந்தாய நம:, கபிலாய நம:, கஜகர்ணகாய நம:, லம்போதராய நம:, விகடாய நம: விக்ந ராஜாய நம: விநாயகாய நம: தூம்ரகேதவே நம: கணாத்யக்ஷாய நம: பாலசந்த்ராயநம: கஜானனாய நம: வக்ர துண்டாய நம:, ஶூர்ப்ப கர்ணாய நம:, ஹேரம்பாய நம: ஸ்கந்த பூர்வஜாயநம: தூபதீபார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி. பூர்புவஸ்ஸுவ: (நிவேதன வஸ்துவை ப்ரோக்ஷித்து) ப்ராணாயஸ்வாஹா, அபானாய ஸ்வாஹா, வ்யானாய ஸ்வாஹா, உதானாய ஸ்வாஹா, ஸமானாய ஸ்வாஹா, ப்ரும்மணே ஸ்வாஹா. விக்நேஶ்வராயநம: குளம் (வெல்லம்) நிவேதயாமி. கதளீபலம் (வாழைபழம்) நிவேதயாமி. நைவேத்யானந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. பூகிபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம், கர்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்ய

தாம். கர்ப்பூரதாம்பூலம் ஸமர்ப்பயாமி. (சூடம் ஏற்றி தீபாராதனை) கற்பூரநீராஜனம் ஸமர்ப்பயாமி. ப்ந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி. ஸுவர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி மரதக்ஷிண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி. ப்ரார்த்தனை-வக்ர துண்ட மஹாகாய ஸூர்ய கோடி ஸமப்ரப, அவிக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா.

ஸ்ரீ வரலக்ஷ்மீ, க்ருஷ்ணுஷ்டமீ, விநாயகபூஜா ஸங்கல்பம்

(அக்ஷதையை கையில் எடுத்து) ஶுக்லாம் பரதம்—ஶாந்தயே. ஓம்பூ:—மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஶ்வர (ஸ்ரீமன் நாராயண) ப்ரீத்யர்த்தம், ஶுபேஶோபனே முஹூர்த்தே ஆத்யப்ரும்மண: த்விதீய பரார்த்தே ஶ்வேத வராஹகல்பே வைவஸ்வத மன்வந்தரே கலியுகே ப்ரதம பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரத கண்டே மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே ஶகாப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே விக்ருதி நாம ஸம்வத்ஸரே தக்ஷிணுயனே வர்ஷர்தௌ-மாஸே—பக்ஷே—ஶுபதிதௌ—வாஸர யுக்தாயாம்—நக்ஷத்ரயுக்தாயாம் ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம்—திதௌ அஸ்மாகம் ஸஹகுடும்பானும் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய ஐஶ்வர்ய அபிவ்ருத்யர்த்தம், தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித புருஷார்த்த ஸித்யர்த்தம்இஷ்ட காம்யார்த்த ஸித்யார்த்தம் கல்போக்த ப்ரகாரேண த்யான ஆவாஹனுதி ஷோடஶோபசாரை:—பூஜாம் கரிஷ்யே.

(வரலக்ஷ்மீபூஜையில் ஸிம்ஹ மாஸே ஶுக்லபக்ஷே த்ரயோதஶ்யாம் ஶுபதிதௌ ப்ருகு வாஸர யுக்தாயாம் உத்திராஷாட நக்ஷத்ரயுக்தாயாம் என்று சேர்த்துக்கொள்ளவும். அதோடு "ஸத் ஸந்தான ஸௌபாக்ய ஶுப பல அவாப்த்யர்த்தம் தீர்க்க ஸௌமங்கல்ய அவாப்த்யர்த்தம், வரலக்ஷ்மீ ப்ரஸாத ஸித்யர்த்தம்" என்பதையும் சேர்த்துக்கொள்ளவும்).

(ஜன்மாஷ்டமி ஸங்கல்பத்தில் க்ருஷ்ணபக்ஷே அஷ்டம்யாம் ஶுபதிதௌ ஸோமவாஸர யுக்தாயாம், ரோகிணீ நக்ஷத்ர யுக்தாயாம் என்று சேர்த்துக்கொள்ளவும்)

(விநாயக சதுர்த்தி ஸங்கல்பத்தில் ஶுக்ல பக்ஷே சதுர்த்யாம் ஶுபதிதௌ ப்ருகு வாஸரயுக்தாயாம் ஸ்வாதி நக்ஷத்ர யுக்தாயாம் என்று சேர்த்துக்கொள்ளவும்).

ஸங்கல்பம் முடிந்ததும் அக்ஷதையை வடக்கில் எறிந்துவிட்டு (ஜலத்தை கையால் தொட்டு) கணனும் த்வா—ஸுமுகம் விக்நேஶ்வரம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி, க்ஷேமார்த்தே புனராகமனுயச (விக்நேஶ்வரரை வடக்கு பக்கம் கொஞ்சம்

நகற்றி அவர்மீதுள்ள புஷ்பம் அக்ஷதையை தலையில் தரிக்கவும்)
மணி : ஆகமார்த்தம் து தேவானும் கமனார்த்தம்து ரக்ஷஸாம்
கண்டாரவம் கரிஷ்யாமி தேவதாஹ்வான லாஞ்சனம்.
கலஶபூஜை : (தீர்த்த பாத்திரத்திற்கு 4 புறமும் சந்தனமிட்டு, ஒரு புஷ்பம் போட்டு, கையால் மூடிக்கொண்டு ஜபிக்க வேண்டும்).

கலஶஸ்யமுகே விஷ்ணு : கண்டேருத்ர : ஸமாஶ்ரித :
மூலேதத்ர ஸ்திதோ ப்ராஹ்மா மத்யே மாத்ரு கணாஸ்திதா:
குக்ஷௌது ஸாகராஸ் ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா.
ருக்வேத: அத யஜுர்வேத: ஸாமவேத : அப்யதர்வண :
அங்கைஶ்ச ஸஹிதாஸ்ஸர்வே கலஶாம்பு ஸமாஶ்ரிதா :
கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி.
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு.

(பிறகு அந்தந்த பூஜைக்கு உரிய த்யான ஆவாஹன முறைப்படி செய்யவும்.)

ஒவ்வொரு பூஜையின் முடிவிலும் அந்த அந்த "தேவதா ஸ்வரூபஸ்ய ப்ராம்மணஸ்ய இதமாஸனம்" என்று ஒரு ப்ராம் மணர் மீது அக்ஷதையைப் போட்டு, யதோக்தமாய் ஶக்திக்கேற்றபடி ஷோடஶோபசார பூஜை செய்து, தாம்பா ளத்தில் தேங்காய் மூடி, வாழைப் பழம், வெற்றிலை பாக்கு, மற்ற உபாயனங்கள், யதாஶக்தி தக்ஷிணையுடன் அவருக்கு ஸமர்ப் பித்து, நமஸ்கரித்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண் டும். வேதம் அறிந்த ப்ராம்மணரிடம் ஸமஸ்த தேவதைகளும் வஸிக்கின்றனர் என்பது வேதவாக்கு.

நைவேத்ய வஸ்துக்கள்

சாதம் — ஶால்யான்னம்
பாயஸம் — பாயஸம்
வடை — மாஷாபூபம்
போளி — குளாபூபம்
கொழக்கட்டை — மோதகம்
அதிரஸம் — கோதுமாபூபம்
பதிர்பேணி — சர்க்கராபூபம்
லட்டு — லட்டுகம்
தேங்காய் — நாளிகேரம்
வாழை — கதலீபலம்
மாதுளை — பீஜாபூரபலம்
விளாம்பழம் — கபித்தபலம்
மாம்பழம் — ஆம்ரபலம்
த்ராக்ஷை — த்ராக்ஷாபலம்
கற்கண்டு — ரஸகண்டம்
கரும்பு — இக்ஷுதண்டம்
சாத்துகொடி — நாரங்கபலம்.

பூஜையில் கவனிக்கவேண்டிய முக்ய விஷயங்கள்

தீபம், மணி, வெற்றிலை, தேங்காய், புஷ்பம், பழம் இவை களைப் பூமிமீது வைக்கக்கூடாது. க்ருஹஸ்தரானல், பஞ்ச

கச்சம் அணியாமல், மேல் வஸ்த்ரம் இல்லாமல், நெற்றிக்கு இடாமல் பூஜை செய்யக் கூடாது. பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள் காம்பு ஆய்ந்து, புழு பூச்சி அரிக்காமலும், கேஶம் முதலியன இல்லாமலும் கவனிக்க வேண்டும். பூஜாத்ரவ்யங்கள் எல்லாவற்றையும் ஜலத்தில் அலம்பி வைப்பது நல்லது. பூஜைக்கு உட்காருவதற்கு முன் வேண்டிய ஸாமக்கிரியைகள் எல்லாவற்றையும் யோசித்து ஞாபகமாய் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். பூஜை நடுவில் எழுந்து போகக் கூடாது. மந்த்ரம் தவிர மற்ற பேச்சு கூடாது. கூடிய வரையில் மனமும் வாக்கும் ஒருமைப்பட வேண்டும். இடுப்புக்குக் கீழான பாகங்களை தொடக்கூடாது. சொல்லும் மந்த்ரம், அர்ச்சனை இவைகளின் பொருளை நன்கு த்யானம்செய்யவேண்டும். பூஜாங்கமாக ப்ராம்மணரையும் ஆசார்யரையும் யதாஶக்தி பூஜிக்க வேண்டும் ஸ்வாமியை கிழக்கு முகமாய் பார்க்கும்படி வைத்து, நாம் வலது பக்கம் உட்கார்ந்து பூஜிப்பது உத்தமம்.

ஸ்ரீ வரலக்ஷ்மீ வ்ருதம்

ஶ்ராவண மாதத்தில் பௌர்ணமிக்கு முன்புவரும் ஶுக்ர வாரத்தில் செய்ய வேண்டிய வ்ருதம் இது. நம் தேசத்தில் பெரும்பாலோரான பெண்களால் அனுஷ்டிக்கப்படும் வ்ருதங்களில் இது ஒன்று. எல்லா வ்ருதங்களையும் ஸதிபதிகள் இருவரும் சேர்ந்தே செய்யவேண்டும். அதிலும் சதுர்த்தி, ரிஷி பஞ்சமி, உமாமஹேஶ்வராதி வ்ருதங்களைப் பூர்வஸுமங்கலிகளும் செய்வர். இந்த வரலக்ஷ்மீ வ்ருதம் ஸுமங்கலிகளுக்கே. சில குடும்பங்களில் இப்பூஜை செய்வதில்லை. குல பரம்பரையாக வந்ததையே அனுஷ்டிக்க வேண்டும் என்ற நீதியைத் தழுவியதே அதற்குக் காரணம். நவராத்திரியிலும் ஸ்ரீ லக்ஷ்மீ தேவிபூஜை துர்க்கா ஸரஸ்வதிகளுடன் சேர்த்து "துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதி பூஜை" என செய்யப்படுகிறது. லக்ஷ்மீ தேவி பராஶக்தியேயானாலும் செல்வத்திற்கு அதிஷ்டான தேவதையாகக் கருதப்படுகிறாள். அந்த ஒரு ஶக்தியே பற்பல நிமித்தங்களைக் கொண்டு அஷ்டலக்ஷ்மியாகவும் கருதப்படுகிறாள். மஹாலக்ஷ்மியின் அருளால் செல்வம் தழைக்கும். பரமசிவத்தின் பெருமை தனியாக வர்ணிக்கப்படுவது ஸ்ரீருத்ரத்தில். திருமாலின் சிறப்பைக் கூறுவது புருஷஸூக்தமாம். அங்ஙனமே மஹாலக்ஷ்மியின் மஹிமையை வர்ணிப்பது ஸ்ரீஸூக்தம் எனப்படும்.

ஸ்ரீலக்ஷ்மீ கடாக்ஷம்

ஸ்ரீஸூக்தம் எனும் மஹாமந்த்ரத்தை ப்ரதிதினம் ஜபம் செய்து வந்தால் ஐஶ்வர்யம் உண்டாகும். நெய்யினால் ஹோமம் செய்தால் விரைவில் செல்வம் உண்டாகும். செல்வம் என்பது பொதுவான பெயர். தற்சமயம் நமதிடையே ரூபாய், அணா, பைஸாவே தனம் எனப்படுகிறது. அந்த தனம் இருந்தும் தான்யம், தைர்யம், பசு, அஶ்வம், வர்ச்சஸ், ஆயுஸ், ஆரோக்யம், புத்ரன் முதலிய செல்வம் இல்லாவிடில் பயனில்லை. ஸ்ரீ மஹாலக்ஷ்மியினுடைய பூஜையால் ஸகலவிதமான பாக்யங்களையும் பெறலாம். செல்வம் முதலியன வீட்டில் வஸிக்கும் குடும்பிகளுக்கு அத்யவஶ்யமாக வெண்டியவை. தைத்திரீய உபநிஷத்தில் லக்ஷ்மீ கடாக்ஷத்தைப் பெறும் படியும் அதற்கு வேண்டிய மந்த்ரமும் கூறப்படுகிறது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்றபடி தனம் இன்றி தரணியில் தேஹத்தைத் தரிப்பதுகூட கஷ்டமே. இத்தகைய லக்ஷ்மீ கடாக்ஷத்தால் உண்டாவதும் 'லக்ஷ்மீ கடாக்ஷம்இது' என எண்ணப்படுவதுமான பொருள்கள் அனைத்தும் லக்ஷ்மீ என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றன. தனலக்ஷ்மீ, தான்ய லக்ஷ்மீ, கஜலக்ஷ்மீ, ராஜ்ய லக்ஷ்மீ, ஸ்வர்க்க லக்ஷ்மீ, நாகலக்ஷ்மீ, மோக்ஷ லக்ஷ்மீ, என்பன போல் பல வஸ்துக்களுடன் லக்ஷ்மீஶப்தம் சேர்க்கப்படுகிறது. அதுமாத்ரமல்ல. ஒருபொருள் அழகாக இருந்தால், "ஆஹா, அதுலக்ஷ்மீகரமாக இருக்கின்றது" எனப்படுகிறது. பார்வதீகரம் என்றோ, ஸரஸ்வதீகரம் என்றோ கூறுவதில்லை. ஆதலால் உலகிலுள்ள அனைவரும் லக்ஷ்மீ கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகுதல் வேண்டும். உலகையும் உடலையும் துறந்த க்ஞானியர் கூட மோக்ஷலக்ஷ்மீ கடாக்ஷத்தை விரும்ப வேண்டும்.

பாண்டவ மத்யமனான பார்த்தன் கண்ணன் ஸோதரியான ஸுபத்ரையை மணக்க விரும்பினான். ஆனால், பலராமனோ அவளைத்தன் சிஷ்யனான துர்யோதனனுக்குத் தருவதாக வாக்களித்திருந்தார். பலராமனை விரோதம் செய்துகொண்டு, பார்த்தனுக்கோ, மற்றவருக்கோ ஸுபத்ரையை அளிக்க அவள் பெற்றோரும் கண்ணனும் விரும்பவில்லை. ஆயினும் அர்ஜுனன் மனம் ஸுபத்ரையின் மீதும், ஸுபத்ரையின் மனம் அர்ஜுனன் மீதும் சென்றது. தெய்வஸஹாயம் இருந்தாலல்லது இருவர் மனம்போல் மணம் நடக்காது என உணர்ந்தான் விஜயன். தனது குலதெய்வமான வ்யாஸரை அடுத்துப் பணிந்தான். தன் விருப்பத்தைத் தெரிவித்து அதைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும் என வேண்டினான். கருணாமூர்த்தி

யான ஸ்ரீவேதவ்யாஸர் விரைவில் பயனை அளிக்க வல்லதான ஸ்ரீலக்ஷ்மீ ஹ்ருதயம் என்ற மந்த்ரத்தை உபதேசித்து "இதை ப்ரதிதினம் ஜபம் செய். வெள்ளிக்கிழமை மாலையில் நெய் விளக்கு ஏற்றிவைத்து, அதனருகே அமர்ந்து, 108 முறை ஜபம் செய். உனது விருப்பம் விரைவில்பூர்த்தியாகும்" என்றார். அர்ஜுனன் மனம் மகிழ்ந்தது. விதிப்படி உபதேசம் பெற்றான் ஆதித்ய ஹ்ருதயத்தை ஜபம் செய்த ராமனைப்போல் வெற்றி பெற்றான். ஸ்ரீலக்ஷ்மியின் அருளாலும், கண்ணன் கருணையாலும் ஸுபத்ராவிவாஹம் நடந்தேறியது (நம் ஆசிரியரால் எழுதப்பட்ட ஸ்ரீஸ்துதி குஸுமாஞ்ஜலியில் ஸ்ரீலக்ஷ்மீ ஹ்ருதய மந்த்ரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வேண்டியவர் வாங்கி உபதேசம் பெற்று லக்ஷ்மீ கடாக்ஷம் பெற வேண்டுகிறோம் —விலை 4 அணா).

ஸ்ரீலக்ஷ்மீ கடாக்ஷம் எங்கு உண்டாகாது?

கலஹம் செய்பவர், க்ரூரமாகப் பேசுபவர், பொய் கூறுபவர், ஸந்த்யாகாலத்தில் உண்பவர், மயிர், எலும்பு, உமி, கரி இவைகளைக் காலால் மிதிப்பவர், கால் அலம்பாமல் உண்பவர், மணல், சாம்பல், உப்பு, கரி இவைகளால் பல்துலக்குபவர், அதிதிக்கு அன்னம் இடாதவர், மாத்ரு பித்ரு பணிவிடை செய்யாதவர், ஸ்வகர்மாவை விட்டவர், நகத்தைப் பல்லால் கடிப்பவர் ஆகியவர்களிடம் லக்ஷ்மீ வஸிக்கமாட்டாள். அவளது மூத்தவளான மூதேவியே இங்கு வஸிப்பாள்.

ஸ்ரீலக்ஷ்மீ கடாக்ஷம் எங்கு உண்டாகும்?

தேவர்கள் ஸ்ரீதேவியை வணங்கி, "தாயே, தாங்கள் எங்கு வஸிக்கிறீர்கள்? தங்கள் கருணா கடாக்ஷத்திற்குப் பாத்ரமாவர் யாவர்? என வினவினர். ஸ்ரீதேவிகூறினாள்: எந்த வீட்டில் காலையில் எவரும் தூங்காமல் எழுந்திருந்து நாம ஸ்மரணம் கீர்த்தனம்செய்கின்றனரோ, எங்கு காலைமாலைகளில் வீட்டு வாயிலில் சாணிதளித்து, கோலம்போட்டு, தீபம் ஏற்றி வைக்கின்றனரோ, எங்கு தம்பதிகள் சண்டையின்றி ஸுமுகமாக இருக்கின்றனரோ, எங்கு சுசிருசியாய் ஆசாரமாக இருக்கின்றனரோ, எங்கு ஸ்வதர்மம் நன்கு அனுஷ்டிக்கப் படுகிறதோ, எங்கு தேவபூஜை, அதிதிபூஜை, ஔபாஸனம், வைச்வதேவம், மாத்ரு பித்ரு சுச்ரூஷை நடக்கின்றனவோ, எங்கு பெண்கள் ஸந்தோஷமாக இருக்கின்றனரோ, எங்கு கோபூஜை, வேதத்வனி, ஹோமதூபம் இருக்கின்றதோ, எங்குபாத்ரங்கள் பரப்பப்படாமலும், தான்யம் சிந்தாமலும் இருக்கின்றதோ அங்கு வஸிப்பேன்" என்றாள்.

லக்ஷ்மியின் அவதாரங்கள்

லக்ஷ்மீதேவி நாராயணனை விட்டுப்பிரியாத அவருடன் சேர்ந்த ஒரு ஶக்தியாவள். பராஶக்தி தனது அம்சத்தால் துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதி என்ற மூன்று ஶக்திகளைப் படைத்து, ஶிவன், நாராயணன், சதுர்முகன் இவர்களுக்குத் தந்ததாக தேவீபாகவதம் கூறுகிறது. இந்த்ரன் கர்வத்தால் துர்வாஸர் அளித்த பராஶக்தியின் புஷ்ப ப்ரஸாதத்தை அலக்ஷ்யம் செய்தான். கோபமே ரூபமாக வந்த துர்வாஸர் பொறுப்பாரோ அதை? "லக்ஷ்மீ கடாக்ஷத்தை இழப்பாய்" என ஶபித்தார். இந்திரனது ஶோபை அகன்றது. ஸ்வர்க்க லக்ஷ்மீ அவனை விட்டு அகன்றாள். மூத்ததேவி அவனையும் ஸ்வர்க்கத்தையும் சூழ்ந்தாள். நாளுக்கு நாள் செல்வம், பலம், அழகு எல்லாம் குறைந்தன. ப்ருஹஸ்பதியுடன் திருமாலிடம் சென்று முறையிட்டான். அவர் உத்திரவுப்படி அஸுரரையும் சேர்த்துக் கொண்டு பாற்கடலைக் கடைந்தான். க்ஷீர ஸமுத்திரத்தின் தவப்பயனாக தேவி பாற்கடலில் உதித்தாள். ஆதலின் க்ஷீரஸமுத்ர ராஜ தனயா என்கிறோம். ப்ருகு மஹரிஷியின் ப்ரார்த்தனைக்கு இணங்கி பார்க்கவி என்ற பெயருடன் தோன்றினாள். பாற்கடலில் உதித்த லக்ஷ்மீ தேவியின் கடாக்ஷத்திற்கு தேவர் பாத்ரமாயினர். அதனால் இழந்த ஶோபையையும், பலத்தையும், ஸ்வர்க்கத்தையும் திரும்பப் பெற்றனர். ஶாஸ்த்ரத்தில் கண்டபடி தர்மங்களை நன்கு அநுஷ்டித்தால் லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும்.

வரலக்ஷ்மீ வ்ருதம் உண்டானது எப்படி?

ஸௌராஷ்ட்ர தேசத்திலே பத்ரஶ்ரவா என்றோர் வேந்தன் இருந்தான். அவன் மனைவி பெயர் ஸுசந்த்ரிகா. இவர்களுக்கு 7 புதல்வர்கள். ஒரே ஒரு பெண். அவள் பெயர் ஶ்யாமா. அழகிலும் குணத்திலும் கல்வியிலும் சிறந்தவள். இவளது தாய் தர்மத்திலும் கற்பிலும், உயர் குலத்திலும் உத்தமி எனப் பெயர் பெற்றவள். இவளிடம் மஹாலக்ஷ்மிக்கு கருணை உதித்தது. தனது வரலக்ஷ்மீ வ்ருதத்தை இவளுக்கு உபதேசித்து ஸர்வஸம்பத்துடன் வாழும்படி செய்யக் கருதினாள். வயதான ப்ராம்மண ஸுமங்கலி வேஷம் தரித்தாள். ராணியின் அந்தப்புரத்திலே நுழைந்தாள். அது ஶுக்ர வாரமும் (வெள்ளிக்கிழமை) த்வாதஶியும் கூடிய லக்ஷ்மியின் அவதார தினமாம். ராஜபத்னி அவளை வரவேற்று "தாங்கள் யார்? எங்கு வந்தீர்கள்? என்ன வேண்டும்?" என அன்புடன் வினவினாள். வேதிய ஸ்த்ரீ வேடம்பூண்ட ஸ்ரீதேவி "நீ தர்மிஷ்டை. மஹாபதிவ்ரதை எனக்கருதி தர்மோபதேசம் செய்ய

வந்தேன். ஸ்ரீதேவியின் அவதாரதினமான இன்று நீ வயிறார உண்டு, வாய் நிறைய தாம்பூலம் தரித்து இருக்கிறாயே, பாபி" என்றாள். இதைக்கேட்டதும், போதாத காலத்தினால் பார்ந்தையான ஸுசந்த்ரைக்கும் கோபம் உண்டானது. கோபம் பொல்லாததல்லவா? கோபங்கொண்டவர் எதைத்தான் செய்ய மாட்டார்? ராணி எழுந்தாள் சினத்துடன். "யார் பாபி?" என அறைந்தாள் ஒரு அறை ஸ்ரீதேவியின் கன்னத்திலே. ஸ்ரீதேவி கண்ணீர் விட்டு கதறிக்கொண்டே எழுந்து சென்றாள். வருத்தத்துடன் போகும் தேவியைப்பார்த்து ச்யாமா என்ற ராஜகன்யகை "பாட்டி, ஏன் அழுகிறீர்? உமக்கு என்ன வேண்டும்?" என்றாள். "குழந்தாய், எனக்கு ஒன்றும் வேண்டாம். உன் தாயாருக்கு நல்லது கூற வந்தேன். தீமை செய்தாள் அவள். நான் வந்த வழியே செல்கிறேன்" என்றாள் ஸ்ரீதேவி. "பாட்டி, அந்த நல்லதை எனக்கு உபதேசம் செய்யுங்கள்" எனக்கூறி, ஆஸனம் அளித்து, ஸ்ரீதேவியை நன்கு உபசரித்தாள். ஸந்தோஷங்கொண்ட ஸ்ரீதேவி அக்குழந்தைக்கு ஸ்ரீவரலக்ஷ்மீ வ்ருதம், அதை அனுஷ்டிக்க வேண்டிய வழி, 9 முடியுள்ள கோம்புசரடைக் கட்டிக் கொள்ளும் முறை எல்லாவற்றையும் உபதேசித்தாள். அன்று முதல் அக்குழந்தை சுக்ரவாரந்தோறும் வரலக்ஷ்மீ பூஜை செய்து வந்தாள்.

ச்யாமையின் பெற்றோர் செல்வம் நாளுக்கு நாள் குறைய ஆரம்பித்தது ஐச்வர்யம் க்ஷீணித்து வருவதைக் கண்ட அரசன் ராஜ்யம் அகலுவதற்குள்ளே பெண்ணுக்கு மணம் செய்வித்தான். மாலாதரன் என்ற மன்னவனை மணந்தாள். இவள் செய்யும் வரலக்ஷ்மீ வ்ருதத்தால் அவனுக்குச் செல்வம் வளர்ந்த வண்ணமாயிருந்தது. லக்ஷ்மியை அவமதித்த தோஷத்தால் பத்ரச்ரவா ராஜ்யத்தை இழக்க நேரிட்டது. பகைவர் படை பட்டினத்தைச் சூழ்ந்தது. உயிர்தப்பி ஓடினான் மனைவியுடன் மன்னன். உடுக்க உடையும், உண்ண உணவுமின்றி இருவரும் ஊர்ஊராகத்திரிந்தனர். இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள் ச்யாமா எனும் அவர்களது பெண். ராஜ்யத்தை இழந்த தந்தை தாய்களை வீட்டிற்கு அழைத்து விருந்திட வெட்கப்பட்டாள். வெளியூரில் அவர்களைத் தங்கும்படி செய்து வேலையாள் மூலம் அன்னமிட்டு ரக்ஷித்தாள். இதுவும் அவளுக்குத் தொல்லையாய் இருந்தது. ஒரு பாத்ரம் நிறைய ஸ்வர்ண நாணயத்தை நிறப்பி தந்தைக்கு அளித்து, வெளியூர் சென்று வஸிக்கும்படி கூறினாள். அவரும் மனமகிழ்ச்சியுடன் மனையாளை அழைத்து, பாத்ரத்தைத் திறந்தார். அது அவ்வளவும் கரித்துண்டாய் இருக்கக்கண்டு இருவரும் வருந்தினர்.

கதறினர். மறுபடி தந்தை இதை மகளுக்கு உரைக்க, ஸ்யாமைக்கு தன் தாய் லக்ஷ்மிக்கு செய்த அபசாரம் நினைவிற்கு வந்தது. உடனே, அந்த வ்ருதத்தைப் பூஜாவிதியுடன் தாய்க்கு உரைத்து அவளையும் அனுஷ்டிக்கும்படி கூறினாள். தாயும் இதைக் கேட்டு அங்ஙனமே ஒழுங்காகச் செய்து வந்தாள் நாளுக்கு நாள் லக்ஷ்மீ கடாக்ஷத்தால் நன்மை உண்டானது பழைய மந்த்ரிகளும் ஸேனாபதியும் சிறியபடை திரட்டிக் கொண்டு அரசனை அணுகினர். தைர்ய லக்ஷ்மீ அவன் மனதிலே உதித்தாள். வீரலக்ஷ்மீ அவனது புஜத்திலே வஸித்தாள். விரைந்து சென்றான் பகைவனை வெல்ல. இச் செய்தியைக் கேட்டவுடன் பகைவன் பயந்தோடினான். ராஜ்ய லக்ஷ்மியும் அவனிடம் வந்து சேர்ந்தாள். இதைக் கேட்ட பெண் அகமகிழ்ந்தாள். இவள் தந்தை ஏழை என உணர்ந்த ஸ்யாமையின் பதி மாலாதரன் பரிஹாஸமாக "நீ என்ன ஸ்ரீதனம் கொண்டுவந்தாய் பிறந்தவீட்டிலிருந்து?" என்று கேட்டான். அதற்கு ஸ்யாமை, "நாத, ராஜ்ய ஸாரத்தைக் கொண்டு வந்தேன்" என்றாள். "ராஜ்ய ஸாரமா? அது என்ன? என் கண்ணில் படவில்லையே?" என்றார் பதி. "அது கண்ணில் படாது. நாளை உண்ணும்போது உணர்த்துகிறேன்" என்றாள் உத்தமி ஸ்யாமை. மாலாதரன் அவள் தந்தை வீட்டிலிருந்து கொண்டு வந்தது வரலக்ஷ்மீ பூஜை தவிர வேறில்லை. இப் பூஜை ராஜ்ய ஸாரமாகுமா என்று நினைத்தான். மறுநாள் உணவு பரிமாறும்போது ஸ்யாமை உப்பில்லாத பண்டங்களையே பதிக்கு அளித்தாள். "ஒன்றையும் வாயில் வைக்க முடியவில்லையே" என்றார் பதி. ஒன்றும் அறியாதவள்போல் "ஏன்" என்றாள் மனைவி. "உப்பில்லையே" எனப்பதி கூற, "உப்பு ஸாதாரண வஸ்துவே. அதல்லவோ உணவுக்கு ரஸமளிக்கிறது. உணவுக்கு ஸாரம் உப்பு. ராஜ்யத்திற்கு ஸாரம் ஸ்ரீலக்ஷ்மீபூஜை" என்றாள். அரசன் மனைவியினது பக்தியையும் புத்தியையும் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தான். வரலக்ஷ்மீ பூஜையில் தானும் கலந்து கொண்டான்.

புருஷர்களும் (அவகாசமுள்ளவர்) இந்த வரலக்ஷ்மீ வ்ருதத்தில் ஈடுபட்டு, ப்ராண ப்ரதிஷ்டை, ஸ்ரீஸூக்த பாராயணம், நைவேத்யம் ஆகிய வேத மந்த்ரங்களைத் தாங்களே கூறி லக்ஷ்மீ கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகவேண்டும்.

குறிப்பு

எதிர்பார்த்ததற்கு மேல் பக்கங்கள் அதிகமாய்விட்ட படியாலும், பூஜை விஷயங்கள் ஸம்பூர்ணமாய் இருக்கவேண்டும் என்ற அவாவினால் அஷ்டோத்தரம் அர்ச்சனைகளையும் உள்ள இடத்தில் சுருக்கி போட்டதை க்ஷமிக்கவும்.

MAHAMAHOPADHYAYA

ஸ்ரீ வரலக்ஷ்மீ பூஜை.

(ஆரம்பத்தில் விக்நேஶ்வர பூஜை செய்யவும்)

ஸங்கல்பம்: ஶுக்லாம்பரதரம் — ஶுபே ஶோபனே முஹூர்த்தே—ஶுபதிதௌ அஸ்மாகம் ஸஹ குடும்பானாம் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய ஐஶ்வர்ய அபி வ்ருத்யர்த்தம் இஷ்டகாம்யார்த்த ஸித்யர்த்தம் ஸத் ஸந்தான ஸௌபாக்ய ஶுபபல அவாப்த்யர்த்தம் தீர்க்க ஸௌமங்கல்ய அவாப்த்யர்த்தம் வரலக்ஷ்மீ ப்ரஸாத ஸித்யர்த்தம் கல்போக்த ப்ரகாரேண த்யான ஆவாஹனாதி ஷோட ஶோபசாரை: வரலக்ஷ்மீபூஜாம் கரிஷ்யே. கலஶத்தில் தீர்த்தம் விட்டு, இந்த ஶ்லோகம் சொல்லி கலஶ ஸ்தாபனம் செய்யவும்.

வரலக்ஷ்மீ மஹாதேவீ ஸர்வாபரண பூஷிதா
கலஶேஸ்மின் வஸேதஸ்மத் கேஹே ஸௌபாக்ய காரிணீ.

த்யானம்

லக்ஷ்மீம் க்ஷீர ஸமுத்ர ராஜதனயாம் ஸ்ரீரங்க தாமேஶ்வரீம்
தாஸீபூத ஸமஸ்ததேவ வநிதாம் லோகைக தீபாங்குராம்
ஸ்ரீமன் மந்த கடாக்ஷ லப்த விபவ ப்ரஹ்மேந்த்ர கங்காதராம்
த்வாம் த்ரைலோக்ய குடும்பினீம் ஸரஸிஜாம் வந்தே முகுந்த
[ப்ரியாம்.

பத்மாஸனே பத்மகரே ஸர்வ லோகைக பூஜிதே
நாராயண ப்ரியே தேவி ஸுப்ரீதா பவஸர்வதா.
க்ஷீரோதார்ணவ ஸம்பூதே கமலே கம லாலயே
ஸுஸ்திதா பவ மே கேஹே ஸுராஸுர நமஸ்க்ருதே.
(அஸ்மின் கலஶே - பிம்பே - வரலக்ஷ்மீம் த்யாயாமி)
பால பானு ப்ரதீகாஶே பூர்ண சந்த்ர நிபானனே [வரான்
ஸூத்ரே அஸ்மின் ஸுஸ்திதா பூத்வா ப்ரயச்ச பஹுளான்
(என்று சொல்லி தோரஸ்தாபனம் - சரட்டை - வைக்கவும்)
ஸர்வ மங்கள மாங்கள்யே விஷ்ணுவக்ஷ ஸ்தலாலயே
ஆவாஹயாமி தேவி த்வாம் அபீஷ்ட பலதா பவ.
(அஸ்மின் கும்பே வரலக்ஷ்மீம் ஆவாஹயாமி)
அநேக ரத்ன கசிதம் முக்தா ஹாரை: விபூஷிதம்
ஸ்வர்ண ஸிம்மாஸனம் சாரு ப்ரீத்யர்த்தம ப்ரதிக்ருஹ்யதாம்.
(ஆஸனம் ஸமர்ப்ப யாமி)
கங்காதி ஸரிதுத்பூதம் கந்த புஷ்ப ஸமன்விதம்
பாத்யம் ததாம்யஹம் தேவி ப்ரஸீத பரமேஶ்வரி.
(பாத்யம் ஸமர்ப்பயாமி)

கங்கா நதி ஸமாநீதம் ஸுவர்ண கலஶே ஸ்திதம்
க்ருஹாண அர்க்யம் மயா தத்தம் புத்ரபௌத்ர பலப்ரதே.
(அர்க்யம் ஸமர்ப்பயாமி)

வைஷ்ணவீ விஷ்ணு ஸம்யுக்தா அஸங்க்யாயுத தாரிணீ
ஆசம்யதாம் தேவபூஜ்யே வரதே அஸுர மர்த்தினி.
(ஆசமனீயம் ஸமர்ப்பயாமி)

ததிக்ஷீர ஸமாயுக்தம் மத்வாஜ்யேன ஸமன்விதம்
மதுபர்க்கம் மயா தத்தம் ஸ்வீகுருஷ்வ மஹேஶ்வரி.
(மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி)

பய: க்ஷீர க்ருதைர்மிஶ்ரம் ஶர்கராமது ஸம்யுதம்
பஞ்சாம்ருத ஸ்னானமிதம் க்ருஹாண பரமேஶ்வரி.
(பஞ்சாம்ருத ஸ்னானம் ஸமர்ப்பயாமி)

ரத்ன கும்ப ஸமாநீதம் ஸர்வதீர்த்தாஹ்ருதம் ஜலம்
ஸ்னானார்த்தம் வ: ப்ரயச்சாமி க்ருஹாண ஹரிவல்லபே.
(ஶுத்தோதக ஸ்னானம் ஸமர்ப்பயாமி)

திவ்யாம்பரயுகம் ஸூக்ஷ்மம் நவம்ச அதி மனோஹரம்
த்ரைலோக்ய ஜனனி த்வம்து க்ருஹாணேதம் மயார்பிதம்.
(வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி)

மாங்கள்ய மணி ஸம்யுக்தம் முக்தாஜால ஸமன்விதம்
தத்தம் மங்கள ஸூத்ரந்தே க்ருஹாண ஹரிவல்லபே.
(கண்ட ஸூத்ரம் ஸமர்ப்பயாமி)

ரத்ன தாடங்க கேயூர ஹார கங்கண மண்டிதே
பூஷணம் க்ருஹ்யதாம் தேவி நமஸ்தே விஷ்ணுவல்லபே.
(ஆபரணானி ஸமர்ப்பயாமி)

சந்தனா கரு கஸ்தூரி ரோசனாதி ஸுமிஶ்ரிதம்
லேபனார்த்தம் மஹாதேவி தாஸ்யாமி ஹரிவல்லபே.
(கந்தம் ஸமர்ப்பயாமி)

ஹரித்ரா குங்குமஞ்சைவ ஸிந்தூரம் கஜ்ஜலான்விதம்
ஸௌபாக்யத்ரவ்ய ஸம்யுக்தம் க்ருஹாண பரமேஶ்வரி
(ஸௌபாக்ய த்ரவ்யம் ஸமர்ப்பயாமி)

ஶாலீயான் சந்த்ரவர்ணாம்ஶ்ச ஸ்னிக்த மௌக்திக ஸன்னிபான்
அக்ஷதான் ப்ரதிக்ருஹ்ணீஷ்வ பக்தானாம் இஷ்ட தாயினி.
(அக்ஷதான் ஸமர்ப்பயாமி)

மந்தார பாரிஜாதாப்ஜ கேதக்யுத்பல பாடலை:
மருமல்லிக ஜாத்யாதி புஷ்பைஸ்த்வாம் பூஜயாம்யஹம்.
(வரலக்ஷ்ம்யை நம: புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி.)

அங்கபூஜா.

வரலக்ஷ்ம்யை	நம:	பாதௌ	பூஜயாமி
மஹாலக்ஷ்ம்யை	,,	குல்பௌ	,,
இந்திராயை	,,	ஜங்கே	,,
சண்டிகாயை	,,	ஜாநுனீ	,,
க்ஷீராப்தி தனயாயை	,,	ஊரு	,,
பீதாம்பர தாரிண்யை	,,	கடிம்	,,
ஸோம ஸோதர்யை	,,	குஹ்யம்	,,
லோகமாத்ரே	,,	ஜகனம்	,,
விஷ்ணுப்ரியாயை	,,	நாபிம்	,,
ஜகத்குக்ஷ்யை	,,	உதரம்	,,
விஸ்வரூபிண்யை	,,	வக்ஷஸ்தலம்	,,
ஜகத்தாத்ர்யை	,,	ஹ்ருதயம்	,,
ஸுஸ்தன்யை	,,	ஸ்தனௌ	,,
கஜகாமின்யை	,,	பார்ஸ்வௌ	,,
கம்புகண்ட்யை	,,	கண்டம்	,,
லோகஸுந்தர்யை	,,	ஸ்கந்தௌ	,,
பத்மஹஸ்தாயை	,,	ஹஸ்தான்	,,
பத்மநாப ப்ரியாயை	,,	பாஹூன்	,,
சந்த்ரவதனாயை	,,	முகம்	,,
உத்பலாக்ஷ்யை	,,	நேத்ரே	,,
சம்பகநாஸிகாயை	,,	நாஸிகாம்	,,
ஹரிப்ரியாயை	,,	ஸ்ரோத்ரே	,,
பிம்போஷ்ட்யை	,,	ஓஷ்டௌ	,,
ஸ்ரியை	,,	அதரம்	,,
சஞ்சலாயை	,,	ஜிஹ்வாம்	,,
ஸுகபோலாயை	,,	கண்டஸ்தலம்	,,
அஷ்டமீ சந்த்ரபாலாயை	,,	பாலம்	,,
மந்தஸ்மிதாயை	,,	சுபுகம்	,,
நீலகுந்தளாயை	,,	அளகான்	,,
கமல வாஸின்யை	,,	பிடரம்	,,
பத்மாஸனாயை	,,	ஸிர:	,,
ஸர்வைஸ்வர்யை	,,	ஸர்வாண்யங்கானி பூஜயாமி	

(அஷ்டோத்தர அர்ச்சனை)

தூபம் தாஸ்யாமி தே தேவி குக்குலா கருஸம்யுதம்
க்ருஹாண த்வம் மஹாலக்ஷ்மீ பக்தானும் இஷ்டதாயினீ
(தூப மாக்ராபயாமி)

ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் வஹ்னினா யோஜிதம் மயா
க்ருஹாண மங்களம் தீபம் வரலக்ஷ்மீ நமோஸ்துதே.
(தீபம் தர்ஸயாமி)

நாளு பக்ஷ்ய ஸமாயுக்தம் நானுபல ஸமன்விதம்
ஷட்ரஸோபாயனிர்யுக்தம் நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம்.
(நைவேத்யம் ஸமர்ப்பயாமி)

உஶீர வாஸிதம் தோயம் கந்தபுஷ்ப ஸமன்விதம்
பாநீயம் க்ருஹ்யதாம் தேவி ஶீதலம் ஸுமனோ ஹரம்.
(பாநீயம் ஸமர்ப்பயாமி)

பூகீபல ஸமாயுக்தம் நாகவல்லி தளைர்யுதம்
கர்பூரசூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம்.
(தாம்பூலம் ஸமர்ப்பயாமி)

நீராஜனம் ஸுமாங்கள்யம் கர்பூரேண ஸமன்விதம்
சந்த்ரார்க வஹ்னி ஸத்ருஶம் க்ருஹாண ஹரிவல்லபே.
(நீராஜனம் தர்ஶயாமி)

புஷ்பாஞ்ஜலிம் க்ருஹாணேதம் இஷ்டஸௌக்ய ப்ரதாயினி
ஸர்வதுக்க விநாஶின்யை தேவி துப்யம் நமோ நம:.
(புஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்ப யாமி)
(ப்ரதக்ஷிணம் செய்து விட்டு)

நமஸ்தே ஸர்வ ஜனனி நமஸ்த்ரைலோக்ய மோஹினி
ஹரிகாந்தே நமஸ்துப்யம் த்ராஹிமாம் பரமேஶ்வரி.
(என்று நமஸ்காரம் செய்து)

ஆயுராரோக்யம் ஐஶ்வர்யம் புத்ரபௌத்ராதிகான் வரான்
ஶத்ரு க்ஷயம் மஹா லக்ஷ்மீ யச்சமே ஸர்வஸம்பத:.
(என்று ப்ரார்த்தனை செய்து கொள்ளவும்.)

தோர க்ரந்தி பூஜை,

கமலாயை	நம:	ப்ரதம	க்ரந்திம்	பூஜயாமி
ரமாயை	,,	த்விதீய	,,	,,
லோகமாத்ரே	,,	த்ரிதீய	,,	,,
விஶ்வ ஜனன்யை	,,	சதுர்த்த	,,	,,
மஹாலக்ஷ்ம்யை	,,	பஞ்சம	,,	,,
க்ஷீராப்தி தனயாயை	,,	ஷஷ்ட	,,	,,
விஶ்வஸாக்ஷிண்யை	,,	ஸப்தம	,,	,,
சந்த்ரஸஹோதர்யை	,,	அஷ்டம	,,	,,
ஹரிவல்லபாயை	,,	நவம	,,	,,

ஸர்வமங்கள மாங்கள்யே ஸர்வபாப ப்ரணாஶினி
தோரகம் ப்ரதிக்ருஹ்ணாமி ஸுப்ரீதா பவஸர்வதா.
(என்று சொல்லி கையில் எடுத்து)

நவதந்து ஸமாயுக்தம் நவஸூத்ரமிதம் ஶுபம்
குங்குமாக்தம் மஹாலக்ஷ்மீ பத்னீயாம் தக்ஷிணே கரே.
(வலது கையில் கட்டிக் கொள்ளவும்)

ஸங்கல்பம் செய்துகொண்டு, வரலக்ஷ்மீ ப்ரீத்யர்த்தம் வரலக்ஷ்மீ பூஜாங்கே க்ஷீர அர்க்ய ப்ரதானம் கரிஷ்யே.

கோக்ஷீரேணயுதம் தேவி கந்த புஷ்ப ஸமன்விதம்
க்ருஹாணார்க்யம் மயாதத்தம் ஸுப்ரீதா வரதாபவ.
(வரலக்ஷ்ம்யை நம: இதமர்க்யம்—3 முறை)

ஒரு ப்ராம்மணரை கந்தபுஷ்பங்களால் பூஜித்து வாயனத்தை தக்ஷிணையுடன் கீழ்கண்ட ஸ்லோகம் சொல்லி கொடுக்கவும்.

இந்திரா ப்ரதிக்ருஹ்ணாதி இந்திராவை ததாதிச
இந்திரா தாரகாத்வாப்யாம் இந்திராயை நமோ நம:

ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்தரம்

1, ஓம்: ப்ரக்ருத்யை நம:—இயற்கையாயிருப்பவள். 2. விக்ருத்யை நம:—செயற்கை வடிவள். 3. வித்யாயை நம:—கல்வி ரூபிணீ. 4. ஸர்வ பூத ஹிதப்ரதாயை நம: ஸர்வப்ராணிகளுக்கும் ஹிதத்தை அளிப்பவள். 5. ச்ரத்தாயை நம:—ச்ரத்தா வடிவள். 6. விபூத்யை நம:—செல்வ ரூபிணீ. 7. ஸுரப்யை நம:—காமதேனு ரூபிணீ. 8. பரமாத்மிகாயை நம:—பரமாத்ம ரூபிணீ. 9. வாசே நம:—சொல் ரூபிணீ. 10. பத்மாலயாயை நம:—தாமரையில் இருப்பவள். 11. பத்மாயை நம:—லக்ஷ்மியாயிருப்பவள். 12. சுசயே நம:—சுத்தமானவள். 13. ஸ்வாஹாயை நம:—ஸ்வாஹாதேவி ஸ்வரூபிணீ. 14. ஸ்வதாயை நம:—ஸ்வதா (பிருத்ஹோம மந்த்ர) ரூபிணீ. 15. ஸுதாயை நம:—அம்ருத ஸ்வரூபிணீ. 16. தன்யாயை நம:—செல்வமுள்ளவள். 17. ஹிரண்மயை நம:—ஸ்வர்ண வடிவ முள்ளவள். 18. லக்ஷ்ம்யை நம:—லக்ஷ்மி (பார்ப்பவள்). 19. நித்ய புஷ்டாயை நம:—எப்பொழுதும் நிறைந்தவள் 20. விபாவர்யை நம:—இரவு வடிவமானவள். 21. அதித்யை நம:—அதிதி (தேவ மாத்ரு) வடிவமானவள். 22. தித்யை நம:—திதி (அஸுர மாத்ரு) வடிவமானவள். 23. தீப்தாயை நம:—ப்ரகாசமானவள். 24. வஸுதாயை நம:—பூமி வடிவமானவள். 25. வஸுதாரிண்யை நம:—செல்வத்தைத் தரிப்பவள். 26. கமலாயை நம:—கமலா (லக்ஷ்மீ) 27. காந்தாயை நம:—அழகானவள். 28. காமாக்ஷ்யை நம:—இஷ்டத்தை அளிக்கும் கண்ணுள்ளவள். 29. க்ரோத ஸம்பவாயை நம:—கோபத்தை உண்டுபண்ணுபவள். 30. அனுக்ரஹ ப்ரதாயை நம:—அருள் புரிபவள். 31. புத்தயே நம:—புத்தி ரூபிணீ. 32. அநகாயை நம:—குற்றமற்றவள். 33. ஹரிவல்லபாயை நம:—விஷ்ணுவுக்கு ப்ரியமானவள். 34. அசோகாயை நம:—சோகமற்றவள். 35. அம்ருதாயை நம:—அம்ருத ரூபிணீ. 36. தீப்தாயை நம:—ப்ரகாசமளிப்பவள். 37. லோகசோக விநாசின்யை நம:—உலகத்தின் சோகத்தைப் போக்குபவள். 38. தர்ம நிலயாயை நம:—தர்மத்திற்கு இருப்பிடம். 39. கருணாயை நம:—கருணை வடிவானவள். 40. லோகமாத்ரே நம:—உலகத்தாய். 41. பத்மப்ரியாயை நம:—தாமரையில்ப்ரியமுடையவள். 42. பத்மஹஸ்தாயை நம:—தாமரையைக் கையிலுடையவள். 43. பத்மாக்ஷ்யை நம:—தாமரை நேத்ரமுள்ளவள். 44. பத்மஸுந்தர்யை நம:—தாமரைபோல் அழகானவள். 4 . பத்மோத் பவாயை நம:—தாமரையில் உண்டானவள். 46. பத்மமுக்யை நம:—தாமரைபோன்ற

முகமுள்ளவள். 47. பத்மநாப ப்ரியாயை நம:—(பத்மத்தை நாபியில் உள்ள) விஷ்ணுவுக்கு ப்ரியமானவள். 48. ரமாயை நம:—ஸந்தோஷப் படுத்துபவள். 49. பத்ம மாலா தராயை நம:— தாமரை மாலை தரித்தவள். 50. தேவ்யை நம;—ப்ரகாசமுள்ளவள். 51. பத்மின்யை நம:—பத்மம் உள்ளவள். 52. பத்ம கந்தின்யை நம:—தாமரைவாஸனை உள்ளவள். 53. புண்ய காந்தாயை நம:—புண்ய வாஸனை உள்ளவள். 54. ஸுப்ரஸன்னாயை நம:—ஸந்தோஷமுள்ளவள். 55. ப்ரஸாதாபிமுக்யை நம:—அருள் புரிய காத்திருப்பவள். 56. ப்ரபாயை நம:—ஒளி வடிவமானவள். 57. சந்த்ரவதனாயை நம:—சந்த்ரனைப்போல் முகமுள்ளவள். 58. சந்த்ராயைநம:—ஆனந்தமளிப்பவள். 59. சந்த்ர ஸஹோதர்யை நம:—சந்திரனுடன் பிறந்தவள். 60. சதுர்புஜாயை நம:—4 கைகளுள்ளவள். 61. சந்த்ர ரூபாயை நம:—சந்த்ர ரூபிணீ. 62. இந்திராயை நம:—ஐச்வர்யமுள்ளவள். 63. இந்து சீதலாயை நம:—சந்த்ரன் போல் குளிர்ந்தவள். 64. ஆஹ்லாத ஜனன்யை நம:—ஸந்தோஷமளிப்பவள். 65. புஷ்ட்யை நம:—புஷ்டி (பலம்) ரூபமானவள். 66. சிவாயை நம:—சிவை (பார்வதி) ரூபிணீ. 67. சிவகர்யை நம:—மங்களத்தைச் செய்பவள். 68. ஸத்யை நம:—பதிவ்ரதை. 69. விமலாயை நம:—சுத்தமானவள். 70. விச்வ ஜனன்யை நம:—உலகத்தை உண்டு பண்ணுபவள். 71. புஷ்டயே நம:—புஷ்டி தருபவள். 72. தாரித்ரிய நாசின்யை நம:—ஏழ்மையை நீக்குபவள். 73. ப்ரீதி புஷ்கரிண்யை நம:—தாமரை தடாகத்தில் விருப்பமுள்ளவள். 74. சாந்தாயை நம:—சாந்தமானவள். 75. சுக்ல மால்யாம்பராயை நம:—வெள்ளை மாலை உடை உள்ளவள். 76. ச்ரியை நம:—ஹரியை ஆச்ரயித்தவள். 77. பாஸ்கராயை நம:—ஸூர்ய ரூபிணீ. 78. பில்வநிலயாயை நம:—பில்வமரத்தில் இருப்பவள். 79. வராரோஹாயை நம: சிறந்த நிதம்ப முள்ளவள் 80. யசஸ்வின்யை நம:—கீர்த்தியுள்ளவள். 81. வஸுந்தராயை நம:—பூமி ரூபிணீ. 82. உதாராங்காயை நம:—சிறந்த அங்க முள்ளவள். 83. ஹரிண்யை நம:—விஷ்ணுபத்னீ. 84. ஹேமமாலின்யை நம:—ஸ்வர்ண மாலை உள்ளவள். 85. தனதான்யகர்யை நம:—தனம் தான்யம் இவைகளை அளிப்பவள். 86. ஸித்தயே நம:—ஸித்த ரூபிணீ, 87. ஸ்த்ரைண ஸௌம்யாயை நம:—ஸ்த்ரீஸமூஹத்தில் அழகானவள். 88. சுப ப்ரதாயை நம:—சுபத்தைத் தருபவள், 89. ந்ருபவேச்மகதானந்தாயை நம:—ராஜக்ருஹத்திலிருக்கும் ஆனந்த ரூபிணீ. 90. வரலக்ஷ்ம்யை நம:—வரலக்ஷ்மி. 91. வஸுப்ரதாயை நம:—தனம் அளிப்பவள். 92. சுபாயை நம;—சுப ரூபிணீ. 93, ஹிரண்ய ப்ராகாராயை நம;—ஸ்வர்ண வடிவமான கோட்டை உள்ளவன். 94. ஸமுத்ர தனயாயை நம: ஸமுத்ர புத்ரீ. 95. ஜயாயை நம:—ஜயரூபிணி. 96. மங்களாயை நம;—மங்கள ரூபிணீ. 97. தேவ்யை நம:—ப்ரகாசிப்பவள். 98. விஷ்ணு வக்ஷஸ்தல ஸ்திதாயை நம:—விஷ்ணுவின் மார்பில் இருப்பவள். 99. விஷ்ணு பத்ன்யை நம:—விஷ்ணு பத்னீ. 100. ப்ரஸன்னாக்ஷ்யை நம:—அருட் கண்ணுள்ளவள். 101. நாராயண ஸமாச்ரிதாயை நம:—நாராயணனை அண்டியவள். 102. தாரித்ரிய த்வம்ஸின்யை நம:—ஏழ்மையை த்வம்ஸம்செய்பவள். 103. ஸர்வோபத்ரவ வாரிண்யை நம:—எல்லா உபத்ரவத்தையும் நீக்குபவள். 104. நவதுர்காயை நம:—நவதுர்கா ரூபிணீ. 105. மஹாகாள்யை நம:—மஹாகாளி ரூபிணீ. 106. ப்ருஹ்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:—ப்ரும்மா விஷ்ணு சிவரூபிணீ. 107. த்ரிகாலக்ஞான ஸம்பன்னாயை நம:—முக்கால அறிவுள்ளவள். 108. புவனேச்வர்யை நம:—புவனங்களுக்கு ஈச்வரீ.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உபாகர்மா

காமோ கார்ஷீத் ஜபம்

ஶ்ராவண தினத்தில் காலையில் எழுந்து ஸ்னானம் செய்து, நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, ப்ரும்மசாரிகள் ஸமிதாதானமும், க்ருஹஸ்தர் ஔபாஸனமும் செய்ய வேண்டும். தைமாத பௌர்ணமியில் அத்யாய உத்ஸர்ஜனம் என்று ஶ்ராவணம் போலவே ஒரு கர்மா செய்ய வேண்டும். அதை அக்காலத்தில் செய்யாத பாபத்தின் ப்ராயஶ்சித்தமாகவே 'காமோகார்ஷீத்' ஜபம்செய்கிறோம். இதை எந்தவித பலஹாரமும் செய்யாமல், ஸங்கவ காலத்தில் தான் (ஸுமார் 8½ மணிக்கு மேல்) செய்ய வேண்டும்.

ஸங்கல்பம்: ஆசமனம் செய்து, பவித்ரம் தரித்து—ஶுக்லாம்பரதரம்—ஶாந்தயே. ஓம்பூ:—மம உபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஶ்வர (ஸ்ரீமன் நாரயண) ப்ரீத்யர்த்தம் ஶுபே ஶோபனேமுஹூர்த்தே அத்யப்ரும்மண: த்விதீயபரார்த்தே ஶ்வேத வராஹகல்பே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்ஶதி தமே கலியுகே ப்ரதமே பாதே ஜம்பூ த்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே ஶகாப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே விக்ருதி நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷருதௌ ஸிம்ஹ மாஸே ஶுக்ல பக்ஷே பௌர்ணமாஸ்யாம் ஶுபதிதௌ பானு வாஸர யுக்தாயாம் ஶ்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம் ஶுபயோக ஶுபகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் பௌர்ணமாஸ்யாம் ஶுபதிதௌ மம ஸமஸ்த பாபக்ஷயார்த்தம் தைஷ்யாம் பௌர்ணமாஸ்யாம் அத்யா யோத்ஸர்ஜன அகரண ப்ராயஶ்சிதார்த்தம் அஷ்டோத்தர ஸஹஸ்ரஸங்க்யயா (அஷ்டோத்தர ஶத ஸங்க்யயா) காமோ கார்ஷீத்மன்யுரகார்ஷீத் இதி மஹாமந்த்ர ஜபம் கரிஷ்யே. ப்ரணவஸ்ய செய்து, 10 ஓம்பூ: செய்து, காமோ கார்ஷீத் மன்யுரகார்ஷீத் நமோநம:, என்று 108 முறை அல்லது 1008 முறை அவரவர் வழக்கப்படி செய்து, உபஸ்தானம் செய்து விட்டு, பவித்ரத்தைக்கழற்றி விட்டு ஆசமனம் செய்யவேண்டும். (காமத்தினாலும் கோபத்தினாலும் தான் ,நான் தை பௌர்ணமியில் அத்யாய உத்ஸர்ஜனம் செய்யவில்லை. ஸர்வே ஶ்வரனே என்னை க்ஷமியும் என்பதே உட்கருத்து.)

ஒரு தாழ்மையான விக்ஞாபனம்: ஶ்ராவணத்தன்று காமோ கார்ஷீத் ஜபமும், மஹாஸங்கல்பமும், ரிஷிதர்ப்பணமும், வேத ஆரம்பமும் செய்ய வேண்டியிருப்பதால், வருஷத்தில் ஒரு நாளான அன்றாவது காலையில் தயவுசெய்து ஒருவித பலஹாரமும் செய்யாமலிருக்கும்படி வேண்டிக்கொள்கிறோம். அதே போல் 1008 முறை காயத்ரீ ஜபம் செய்யும் மறுநாளும் உபவா

ஸம் இருக்கவேண்டியது அத்யவஶ்யம். இஹபர நன்மை உண்டாகும்.

யக்ஞோபவீத தாரணம்

ஶுக்லாம் பரதரம்—ஓம்பூ:—ப்ரீத்யர்த்தம், ஶ்ரௌத ஸ்மார்த்த விஹித நித்ய கர்மானுஷ்டான யோக்யதா ஸித்யர்த்தம் ப்ரும்ம தேஜ: அபிவ்ருத்யர்த்தம் யக்ஞோபவீத தாரணம் கரிஷ்யே என்று ஸங்கல்பம். யக்ஞோபவீத தாரண மந்த்ரஸ்ய பரப்ரும்ம ரிஷி: த்ருஷ்டுப் சந்த: பரமாத்மா தேவதா. யக்ஞோபவீத தாரணே விநியோக: (ப்ரும்ம முடி மேலே இருக்க, வலதுகை மேலும், இடதுகை கீழுமாக) பூணலைப் பிடித்துக் கொண்டு கீழ்கண்ட மந்த்ரம் சொல்லி ஓம் என்று தரிக்கவும்: யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ராஜாபதே: யத்ஸஹஜம் புரஸ்தாத், ஆயுஷ்யம், அக்ரியம் ப்ரதிமுஞ்ச ஶுப்ரம் யக்ஞோபவீதம் பலமஸ்து தேஜ:" பழய பூணல் கழட்ட மந்த்ரம். "உபவீதம் பின்னதந்தும் ஜீர்ணம் கஶ்மல தூஷிதம். விஸ்ருஜாமி அஹி (புனர்)ப்ரஹ்மன் வர்ச: தீர்க்காயுரஸ்துமே"

காயத்ரீ ஜபம்.

ஸங்கல்பம்: ஆசமனம் செய்து பவித்ரம் தரித்து (ஶுக்லாம் பரதம்—முன்போலவே சொல்லி) ஸிம்ஹமாஸே க்ருஷ்ணபக்ஷே ப்ரதமாயாம் ஶுபதிதௌ, ஸோமவாஸர யுக்தாயாம், ஶதபிஷ நக்ஷத்ர யுக்தாயாம்—ப்ரதமாயாம்............... ப்ரீத்யர்த்தம் மித்யாதீத ஸம்வத்ஸர ப்ராயஶ்சித்தார்த்தம், தோஷவத்ஸு அபதனீயதோஷ நிர்ஹரணார்த்தம் அஷ்டோத்தர ஸஹஸ்ர ஸங்க்யயா காயத்ரீ மஹா மந்த்ர ஜபம் கரிஷ்யே. ஓம்பூ:-ப்ரணவஸ்ய—10 ப்ராணாயாமம் செய்து, 1008 முறை ஜபம் செய்யவேண்டும்.

ப்ரும்மசாரி 1008 பாலாஶ ஸமித்தைக்கொண்டு, ஆஜ்யத்தில் தோய்த்து காயத்ரியைச் சொல்லி ஹோமம் செய்ய வேண்டும். க்ருஹஸ்தராயின் ஔபாஸன அக்னியில் 1008 ஸமித்தினால் ஹோமம் செய்வது உத்தமம்.

வேதஸாரம் காயத்ரீ. அதன் ஶக்தி அபாரமானது. ப்ராஹ்மண்யம் நிலைக்க வேர் போன்றது. 24 அக்ஷரங்களில் ஒவ்வொன்றும் தனித்தனி மந்த்ரம். தனித்தனி ரிஷி, சந்தஸ், தேவதை உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான பாபத்தைப் போக்கி, ஒவ்வொரு வகை இன்பம் தரும் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒருவகை ஸ்வரமுண்டு. பிழையின்றி ஜபித்தால், ஸகலவித பாபமும் அகலும்.

ஒவ்வொருவரும் இரண்டு நாள் முன்பாவது தம் ஆசார்யரை அண்டி ஸ்வரத்துடன் உபதேஶம் பெற வேண்டுகிறோம்.

ஜபவிதி: ஆஸனத்தில் கிழக்கு முகமாய் அமர்ந்து, எங்கும் பார்க்காமல், எவருடன் பேசாமல், வளையாமல், நிமிர்ந்து உட்கார்ந்து ஜபிக்கவேண்டும். அர்த்தத்தை த்யானம் செய்து, மனதினால் ஜபிப்பதே உத்தமம். ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்ரியின் மூன்று பாதங்கள் ஆகிய 5 இடங்களில் நிறுத்தியே ஜபிக்கவேண்டும். மேல் வஸ்த்ரத்திற்குள் இருகரங்களையும் மூடி, விரல் ரேகைகளினாலேயே எண்ணவேண்டும். எண்ணாமல் ஜபம் கூடாது. காயத்ரீ ஜபத்திற்கு ருத்ராக்ஷம், துளஸி முதலிய மாலைகளை உபயோகிக்கக் கூடாது. காயத்ரீ நமக்கும், நம்ஸந்ததி, நம்ஸமூஹம், நம்நாடு அனைத்திற்கும் நன்மை தரும்.

மஹாஸங்கல்பம்

(தர்பை ஆஸனத்தில் அமர்ந்து, தர்பை தரித்து)

ஶுக்லாம்பரதம்—ஓம்பூ:—மம உபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஶ்வர (ஸ்ரீமன் நாராயண) ப்ரீத்யர்த்தம் —ததேவ லக்னம் ஸுதினம் ததேவ தாராபலம் சந்த்ர பலம் ததேவ, வித்யா பலம் தெய்வ பலம் ததேவ லக்ஷ்மீபதே: அங்க்ரி யுகம் ஸ்மராமி. ஓம். அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபிவா, யஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்ய அப்யந்தர ஶ்ஶுசி: மானஸம் வாசிகம் பாபம் கர்மணா ஸமுபார்ஜிதம், ஸ்ரீராம ஸ்மரணேனைவ வ்யபோஹதி நஸம்ஶய: ஸ்ரீராம ராம ராம திதிர் விஷ்ணு: ததா வார: நக்ஷத்ரம் விஷ்ணுரேவச, யோகஶ்ச கரணம்சைவ ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத். ஸ்ரீ கோவிந்த கோவிந்த கோவிந்த, அத்யஸ்ரீ பகவத: ஆதிவிஷ்ணோ: ஆதிநாராயணஸ்ய அசிந்த்யயா அபரிமிதயா ஶக்த்யாப்ரிய மாணஸ்ய மஹாஜலௌகஸ்ய மத்யே பரிப்ரமமாணானாம் அநேக கோடி ப்ரஹ்மாண்டானாம் ஏகதமே அவ்யக்த மஹத் அஹங்கார ப்ருத்வி அப் தேஜோ வாயு ஆகாஶாத்யை: ஆவரணை: ஆவ்ருதே அஸ்மின் மஹதி ப்ரஹ்மாண்ட கரண்ட மண்டலே ஆதார ஶக்தி ஆதி கூர்மாதி அனந்தாதி அஷ்டதிக் கஜோபரி ப்ரதிஷ்டிதஸ்ய உபரிதலே ஸத்யாதி லோக ஷட்கஸ்ய அதோ பாகே மஹாநாளாயமான பணிராஜ ஶேஷஸ்ய ஸஹஸ்ர பணாபணி மண்டல மண்டிதே லோகாலோக அசலேன பரிவ்ருதே திக் தந்தி ஶுண்டா தண்டோத்தம்பிதே, லவண இக்ஷு ஸுராஸர்பி ததிக்ஷீர ஶுத்தார்ணவை: பரிவ்ருதே, ஜம்பூ ப்லக்ஷஶால்மலி குஶக்ரௌஞ்ச ஶாக புஷ்கராக்ய ஸப்த த்வீபதீபிகே, இந்த்ர த்வீப கஶேரு தாம்ர கபஸ்தி நாக ஸௌம்ய கந்தர்வசாரண பாரதாதி நவகண்டாத்மகே, மஹாமேரு கிரி கர்ணிகோபேத மஹா ஸரோருஹாயமாண பஞ்சாஶத் கோடி யோஜன விஸ்தீர்ண பூமண்டலே, ஸுமேரு நிஷத, ஹேமகூட

ஹிமாசல, மால்யவத் பாரியாத்ரக கந்தமாதன கைலாஸ விந்த்யாசலாதி மஹாஶைலா திஷ்டிதே, லவண ஸமுத்ர முத்ரிதே, பாரத கிம்புருஷ ஹரீளாவ்ரத, ரம்யக ஹிரண்மய குரு பத்ராஶ்வ கேது மாலாக்ய நவ வர்ஷோப ஶோபிதே, ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரத கண்டே, மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே கர்ம பூமௌ ஸ்வாம்யவந்தி குருக்ஷேத்ராதி ஸம பூமாவர்த்தரேகாயா: பூர்வதிக்பாகே, விந்த்யாசலஸ்ய தக்ஷிண திக்பாகே தண்டகாரண்யே கோதாவர்யா: தக்ஷிணே தீரே ஸகல ஜகத் ஸ்ரஷ்டு: பரார்த்த த்வய ஜீவிந: ப்ரஹ்மண: ப்ரதம பரார்த்தே பஞ்சாஶத் அப்தாத்மிகே அதீதே பஞ்சாஶத் அப்தாதௌ ப்ரதமே வர்ஷே ப்ரதமே மாஸே ப்ரதமே பக்ஷே ப்ரதமே திவஸே அஹனி த்விதீயே யாமே த்ருதீயே முஹூர்த்தே ஸ்வாயம்புவ ஸ்வாரோசிஷ உத்தம தாமஸ ரைவத சாக்ஷுஷாக்யேஷு ஷட்ஸு மனுஷு வ்யதீதேஷு ஸப்தமே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்ஶதி தமே வர்த்த மானே கலியுகே ப்ரதம பாதே ஶாலிவாஹன ஶகாப்தே சாந்த்ர ஸாவன ஸௌராதிமான ப்ரமிதே ப்ரபவாதீநாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸராணாம் மத்யே விக்ருதி நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷருதௌ ஸிம்ஹ மாஸே ஶுக்ல பக்ஷே பௌர்ணமாஸ்யாம் ஶுபதிதௌ பானு வாஸர யுக்தாயாம் ஶ்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம் ஶுபயோக ஶுபகரண ஏவங் குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் பௌர்ண மாஸ்யாம் ஶுபதிதௌ ஸர்வ பாபாபஹரண நிபுண ஸ்ரீ பரமேஶ்வர (ஸ்ரீமன்நாராயண) ப்ரீத்யர்த்தம் அநாதி அவித்யா வாஸனயா ப்ரவர்த்தமானே அஸ்மின் மஹதி ஸம் ஸார சக்ரே விசித்ராபி: கர்ம கதிபி: விசித்ராஸு யோனிஷு புன: புன: அநேகதா ஜனித்வா கேனாபி புண்ய கர்ம விஶேஷேண இதானீம் தன மானுஷ்யே த்விஜன்ம விஶேஷம் ப்ராப்த வத: மம இஹ ஜன்மனி பூர்வஜன்மஸு மயா க்ருதானாம் ப்ரஹ்ம ஹத்யா ஸுராபான ஸ்வர்ண ஸ்தேய குருதல்பகமன தத் ஸம்ஸர்க்காக்ய பஞ்ச மஹாபாதக வ்யதி ரிக்தானாம், அவிக்ஞாத கர்ப்பவத யாகதீக்ஷா மத்யே ராஜன்ய வைஶ்யௌ வத, ஸ்த்ரீ வத, பர்த்ரு வத, பதிவ்ரதா வத, ஸுஹ் ருத்வத, குரும் ப்ரதி ருத்யச, ஸாக்ஷ்யே அந்ருத வாத, ஸமுத்ர யான, ஸர்வ பண்யை: வ்யவஹரண, ஶூத்ர ஸேவன, ஹநிஷ் யாமி இதி வாத, பூம்யந்ருத வாத, நிக்ஷேபஹரண, ப்ரஹ்ம ஸ்வன்யாஸ அபஹரண, ஸ்தேன, நாஸ்திக, நிந்தித கர்மா ப்யா ஸித, மாத்ரு பித்ரு யோனி ஸம்பந்த, மாத்ரு ஸ்வஸா, மாது லானீ ஶ்வஶ்ரூர் கமன், ஶூத்ராபிகமன, ஸ்நுஷா கமன, ஆசார்யபத்ன்யா, ஆசார்ய ஸுதா கமன, பித்ருவ்ய ஸகி ஶிஷ்ய ஸ்த்ரீ, தத்ஸகி கமன, ஶரணாகதா ஸகோத்ரா ராக்ஞீ

ப்ரவ்ராஜிதாகமன, தாத்ரீ வர்ணோத்தமா கமன, ஆஸா மன்யத மாகமன, ஆஹிதாக்னே: யோகினஸ்ச தாராபி கமன, விதுஷ பத்னி கமன, ஆஸ்ரித ஸ்த்ரீ கமன, அயோகிம் கர்பிண்யுதக்யா விக்ஞாத:, கன்யாம் ஆர்தாம் அனிச்சதீம்ச கமன, அக்னி ஹோத்ரார்த்த கபிலா ஹனன, ஸாம யோநீ ஸமன, நீசாபி கமன, சண்டாள்யாம் கர்ப்பாதான, ஶூத்ராயாம் அபத்ய ஜனன, விஶேஷ பதநீ யாதீனும் அதிபாதகானும், ராஜகாமி, பைஶூன பரதோஷம் அவிக்ஞாய, ந்ருப கர்ண ஜாப, அகாம க்ருத அந்ருத வாத, கௌட ஸாக்ஷ்ய, ஸூஹ்ருத் ப்ராஹ்மண வத, யாகஸ்த க்ஷத்ரிய வைஶ்ய வத, ஸூரோரளீக நிர்பந்த, ஸூர் வத்யதிக்ஷேப, வேத நிந்தா, அதீதஸ்ய நாஶன, லோக விதித தோஷாபி ஶம்ஸன, போஜன பங்க்தி மத்யே அக்ரே பாத்ர த்யஜன, வித்யாபி மானேன ஸபா மத்யே ஸத்விஜம் உதா ஸீனஜய, ரஜஸ்வலாந்தர்வத்னி வத, ஶரணாகத வத, தேவ த்விஜ கத பூர்வ புக்த பூம்யப ஹரணாதீனும், ப்ரஹ்ம ஹத்யா ஸமபாத கானும். லஶூன அமேத்ய பக்ஷண, மத்யா க்ருஞ்ஜன பக்ஷண காம்ஸ்ய பாத்ரஸ்த நாளிகேர பான, லவணான் வித கோ க்ஷீர பான, தாம்ப்ர கவ்ய பான, பாணி நகாக்ரஸ்த தோயபான காரணம் வினு வாம ஹஸ்தேன தோயபான, ரஜஸ்வலா முகாஸ்வாத, குருவிஷயே கௌடில்ய, அன்யாபிஸந்தான, அன்ய வாதித்வ, அன்ய கர்த்ருகத்வா தீனும், ராஜகுலாதௌ ஸமுத்கர்ஷ நிமித்தம் அசதுர்வேத ஏவ சதுர் வேதோஹம்இதி அந்ருத பாஷணாதீனும், ஸூராபான ஸமபாதகானும், நர அஶ்வ ரஜத பூமி வஜ்ரமணீனும் ஹரண, ஸ்த்ரீ தேனு ப்ராஹ் மண பூம்யாதிஹரண, ஶதபல தாம்ர ஹரண, அகாம க்ருத நிக்ஷேப ஹரணனும், ஸவர்ண ஸ்தேய ஸமபாதகானும், அகாம க்ருத பகினீஷு அந்த்ய ஜாஸு குமாரீஷு ஸக்யு: புத்ரஸ்ய ச ஸ்த்ரீஷு ஸ கோத்ராஸு ரேதஸ்ஸேக, ப்ரமாதேன தேவ தாரிகா கமன, பித்ருவ்ய மாதாமஹ, மாதுல ஶ்வஶூர ந்ருப பத்னி அபிகமன, உத்தம வர்ணயா : குமார்யா: ரஜஸ்வலாயா: ஶரணாகதாயா : ப்ரவ்ரஜிதாயா: நிக்ஷிப்தாயாஶ்ச அகாமேன கமனாதீனும், குருதல்ப ஸமபாதகானும். ஶோவத ஸ்த்ரீ ஶூத்ர விட்க்ஷத்ர வத, காலே அநுபநீதத்வ ரிணனபாக்ரியா, அநாஹி தாக்னிதா அபண்ய லவணாதி விக்ரய, பரிவேதன ஜாத காத்யனுதான, ப்ருத காத்யாபன, பாரதர் யாக்ய குரு தார வ்யதி ரிக்த ஸ்த்ரீ கமன, பாரி வ்ருத்தாக்ய கனீயவஸிக்ருத விவாஹே ஜ்யேஷ்டஸ்ய விவாஹராஹித்ய வார்துஷ்ய, லவ ணக்ரியா நிந்திதார்த்தோப ஜீவன, வ்ரதலோப, ஸுதானும் விக்ரய, தான்ய குப்ய பஶூஸ்தேய, அயாஜ்ய யாஜன, பித்ரு மாத்ரு குரு பரித்யாக, தடாக ஆராம விக்ரய, அன்யாதூஷண தஸ்ய கன்யா ப்ரதான, பரிவிந்தக யாஜன, அகாம க்ருத

கௌடில்ய ஆத்மனோர்த்தே க்ரியாரம்ப, மத்யபஸ்த்ரீ நிஷேவண ஸ்வாத்யாய அக்னி ஸுத பாந்தவ த்யாக, இந்தனார்த்தம் த்ருமச் சேத, ஸ்த்ரீ ஹிம்ஸௌஷத ஜீவன, ஹிம்ஸ்ர யந்த்ர விதான வ்யஸனானி, ஆத்ம விக்ரய, அகாமக்ருத ஶூத்ர ப்ரேஷ்ய, ஹீன ஸக்ய, ஹீன யோனி நிஷேவண, அநாஶ்ரம வாஸ, பரான்ன பரிபுஷ்டதா, அஸச்சாஸ்த்ர அதிகமன, ஆகா ராக்ய ஸுவர்ணாத்யுத்பத்தி ஸ்தநேஷு அதிகாரிதா, பார்யா விக்ரய, ஔஷதி ஹிம்ஸ, ஸ்த்ரியா ஜீவ, ஆபிசார மூலகர்ம கரண குரு ஸகி அபபாத்ரா பதிதானும்ச அகாமேன கமன, பைஷஜ்ய கரண, க்ராமயாஜன, ரங்கோபஜீவன, நாட்யா சார்யதா, அகா மேன விதவா தேவதாவலீ வேஶ்யா வார்த்தகீ தாவலீ கமன, க்ருதக்ன ப்ராஹ்மண வ்ருத்திக்ன, அஸத் ப்ரதிக்ரஹண, ரிணானபாக்ரியாச, தேவர்ஷி பித்ருணாம் அனபாக்ரிய, அகுஶீல வதாதீனாம் உபபாதகானாம், நிக்ஷிப்தாயா: ஶரண கதாயா: பதிவ்ரதாயா: ஸங்கமன நிமித்தானாம், நிஷித்த ஶாஸ்த்ராபி கமனாதீனாம், வித்வத் ப்ராஹ்மண பங்க்தி பேதா சரண, வார்த்தகீ விதவா வேஶ்ய வ்ருஷல்யாதி ஸம்ஸர்க்க நிமித்தானாம், பால்யே வயஸி கௌமாரே யௌவனே வார்த் தக்யேச ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி வ்யவஸ்தாஸு மனோவாக் காய கர்மேந்த்ரிய வ்யாபாரை: க்ஞானேந்த்ரிய வ்யாபாரைஶ்ச ஸம்பாவிதானாம் பூயோ பூயோ அப்யஸ்தானாம், தத்ர தத்ர கர்ப்போத்பத்தி நிமித்தானாம், தத்ஸஹ போஜன, தது‌ச்சிஷ்ட பக்ஷண, அஶ்வ யோனி பஶ்வாதி யோனி ரேத ஸ்கலித நிமித்தானாம் மோ வத பஶ்வாதி ப்ராணி வத, நிமித் தானாம் ஸ்த்ரீ ஶூத்ர விட் க்ஷத்ரிய வத நிமித்தானாம், அயுக்த லவண பக்வான்ன மது க்ஷீர தில தைல மாம்ஸ மூலபல ஶாக ரக்த வாஸ ஸுவர்ண கம்பளதி விக்ரிய நிமித்தானாம், அஶ் வாதி வாஹன, இக்ஷுகாண்ட காதக பராபவாதன, ப்ருத காத்யாபன, வ்ருக்ஷச் சேதன, தான்ய ரௌப்ய பஶுஸ்தேய, வார்த்துஷி கரண, ஶூத்ர ஸேவா ஶூத்ர ப்ரேஷ்ய ஹீன ஜாதி ப்ரதிக்ரஹ, ஹீனஸக்ய, பங்க்தி பேதன, பாகபேதன, பரான்ன போஜன, அஸத் ஶாஸ்த்ராலாப, க்ராமாதிகார, மடாதிகார, பௌரோஹித்ய, பரீக்ஷா பக்ஷபாதக, தடாக ஆராம விக்ரய, தடாக விச்சேதகாதி பாதகானாம், க்ஞானத: ஸக்ருத் க்ருதானாம், அக்ஞானத: அஸக்ருத் க்ருதானாம், க்ஞானத: அக்ஞானத: ச அப்யஸ்தானாம், அத்யந்த அப்யஸ் தானாம், நிரந்தர அப்யஸ்தானாம், நிரந்தர சிராப்யஸ்தானாம், சிரகால அப்யஸ்தானாம், கர, உஷ்ட்ர, ம்ருகேப, அஜாவிக மீன, அஹி, மஹிஷ, க்ராமாரண்ய, பஶுஹிம்ஸனாதீனாம், ஸங்கலீ கரணானாம், க்ரிமி, கீட, வய, பக்ஷி, ஜலசர, ஜலஜானாம்ச காதன, மத்யானுகத போஜன, பலீத: குஸுமஸ்தேய,

அதைர்யாதி மலினீ கரணனும், நிந்திதேப்யோ தனதானம், அகாமத: வாணிஜ்யம், அகாமத: ஶூத்ரே ஸேவன, அகாமத: அஸத்ய பாஷணதீனும், அபாத்ரீ கரணனும், ப்ராஹ்மணஸ்ய ருஜ: கரண அக்ரேய மத்ய யோர் க்ராதி:, அகாமத: ஜைஹ்ம்ய பும்ஸி பஶூஷூ அயோ நிஷூச மைதுனதீனும், ஜாதிப்ரம்ஶகராணும்—ஏதேஷூயத் அனுக்தம் அந்தர் கதானி யானி பாபானி அவாந்தர பேதா விவிக்ஷயா க்ருஹீ தவ்யானி—தேஷாம் ப்ரகீர்ணகானும், அவிஹித கர்மாசரண, விஹித கர்ம த்யாகா தீனும், ஏவம் நவானும், நவவிதானும், பஹூனும், பஹூ விதானும், ஸர்வேஷாம் பாபானும், அபனேதன த்வாரா, ஸமஸ்த பாப க்ஷயார்த்தம், பாஸ்கர க்ஷேத்ரே—அம்பிகா ஸமேத ஸ்வாமி ஸன்னிதௌ, கல்பகாம்பா ஸமேத அக்னீஸ்வர ஸ்வாமி ஸன்னிதௌ, ப்ருஹத் ஸூந்தர குசாம்பிகா ஸமேத ஸாம்ப மத்யார்ஜூ நேஶ்வர ஸ்வாமி ஸன்னிதௌ, அபய ப்ரதாம் பிகா ஸமேத கௌரீ மாயூர நாதஸ்வாமி ஸன்னி தௌ, மங்களாம்பிகா ஸமேத வைத்யேஶ்வர ஸ்வாமி ஸன்னி தௌ, ஶிவ காம ஸூந்தரீ ஸமதே சித்ஸபேஶ்வர ஸ்வாமி ஸன்னிதௌ, அகிலாண்ட நாயகி ஸமேத ஜம்பு கேஶ்வர ஸ்வாமி ஸன்னி தௌ, பர்வத வர்த்தினீ ஸமேத ஸ்ரீ ராமனுத ஸ்வாமி ஸன்னி தௌ, காஶிவிஶாலாக்ஷீ ஸமேத விஶ்வனுத ஸ்வாமி ஸன்னிதௌ, அலமேலு மங்கா ஸமேத வேங்கடாசல பதி ஸ்வாமி ஸன்னிதௌ, வீர ராகவ ஸ்வாமி ஸன்னிதௌ, சேன்ன புரீஶ்வர ஸ்வாமி ஸன்னிதௌ, (அவரவர் ஊரிலுள்ள அம்மன் ஸ்வாமி பெயரைச் சொல்லிக் கொள்ளவும்), தேவ ப்ராஹ்மண ஸன்னிதௌ, அஶ்வத்த நாராயண ஸ்வாமி ஸன்னிதௌ, த்ரயஸ்த்ரிம்ஶத் கோடி தேவதா ஸன்னிதௌ, விக்நேஶ்வராதி ஸமஸ்த ஹரிஹர தேவதா ஸன்னிதௌ, ஶ்ராவண்யாம் பௌர்ணமாஸ்யாம் அத்யாயோபாகர்ம கரிஷ்யே, ஶ்ராவண்யாம் பௌர்ணமாஸ்யாம் அத்யாயோ பாகர்ம கரிஷ்யே.

மமஉபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஶ்வர (ஸ்ரீமன் நாராயண) ப்ரீத்யர்த்தம் மஹா நத்யாம் உபாகர்மாங்க ஸ்னன மஹம் கரிஷ்யே. அதிக்ரூர மஹாகாய கல்பாந்த தஹனேபம, பைரவாய நமஸ்துப்யம் அநுக்ஞாம் தாது மர் ஹஸி. துர் போஜன துராலாப துஷ்ப்ரதிக்ரஹ ஸம்பவம். பாபம் ஹர மம க்ஷிப்ரம் ஸஹ்ய கன்யே நமோஸ்துதே. த்ரிராத்ரம் ஜாஹ்நவீ தீரே பஞ்ச ராத்ரந்து யாமுனே. ஸத்ய: புனுது காவேரீ பாபம் ஆமரணந்திகம், கங்கா கங்கேதி யோ ப்ருயாத் யோஜனனும் ஶதைரபி. முச்யதே ஸர்வ பாபேப்ய: விஷ்ணுலோகம் ஸகச்சதி.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

கோகுலாஷ்டமி

பகவானது க்ருஷ்ணவதாரம் த்வாபரயுகத்திலே அஷ்டமி திதியிலேயாம். ஆதலின் ஜன்மாஷ்டமி, க்ருஷ்ணாஷ்டமி கோகுலாஷ்டமி எனப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவர் அவதரித்த ரோஹிணீ நக்ஷத்ரத்தை ப்ரதானமாகக் கொண்டு ஸ்ரீ ஜயந்தீ என்ற பெயரால் ஸ்ரீ வைஷ்ணவர் அழைப்பர். வைஷ்ணவர் மாத்திரமின்றி மற்றவரும் அனுஷ்டிக்கும் வ்ரதம் இது. அன்று சுத்த உபவாஸமிருந்து இரவில் வஸுதேவ தேவகிகளுடன் கூடிய க்ருஷ்ணனைப் பூஜித்து, அவர் அவதாரத்தைப் படித்து வந்தனர் நம் முன்னோர். இடையன், இடைச்சி, கன்று, பசு முதலியவர்களுக்கும் ப்ரும்மானந்தத்தை அளித்த கிருஷ்ணவதார தினத்தில் வெல்லச்சிடை, உப்புச்சீடை முதலிய பக்ஷ்யங்களைச் செய்து, பெண் மக்கள் பகவானுக்கு அர்ப்பணம் செய்வர். மாக் கோலத்தில் கண்ணனது சிறிய பாதங்களை தெருவிலிருந்து பூஜை செய்யுமிடம் வரை போட்டு ஆனந்திப்பர். பின்னை மரத்தின் மீதேறி பகவான் குழலூதியதால் பின்னை இலையை அன்று உபயோகிப்பர் பலர். அவருக்கு ப்ரியமான வெண்ணையையும் பாலையும் படைப்பர். விஷ்ணு ஆலயங்களிலிருந்து கண்ணனது விக்ரஹம் வீதியில் வரும். அச்சமயம் அவர் செய்த லீலைகளைக் கோபகுமாரர் ஆடியது போல் உரியடி உத்ஸவம் பலவிடங்களிலும் நடக்கும். தற்காலத்திலோ ஸ்ரீ ஜயந்தி ஸீரீஸ் என்று ஸங்கீதக் கச்சேரிகளை நடத்திப் பொருளீட்டுவர் சிலர். பக்ஷ்யங்களைப் புஜிப்பதோடு நிற்பர் சிலர்.

நாம் அனுஷ்டிக்க வேண்டியது என்ன?

பூ மண்டலத்தவர் அனைவரும் போற்றும் பகவத் கீதையின் பிதா பிறந்த தினம் இது. அதர்மத்தை அறவே அகற்றி, தர்மத்தை நிலை நாட்டிய புண்ய புருஷன் அவதரித்ததினம். பாரதப் போரை நடத்தி, பூ பாரத்தை அகற்றியவன் தோன்றிய தினம். பாரினிலே பக்தியைப் பரப்பிய பரமாத்மா உடலெடுத்த தினம். பல்லாயிரம் ஏகாதஸியின் பலனை ஒரே நாளில் கொடுக்கவல்ல பரம பவித்ரமான தினம். அந்த புண்ய தினத்திலேனும் காலை 5-மணிக்கேனும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவேண்டும். மனதில் க்ருஷ்ண உருவும், வாக்கில் அவர் நாமமும் இருத்தல் வேண்டும். தன்னைப் புஷ்பங்களால் அர்ச்சிப்பதை விட ஸ்வ கர்மாவினால் அர்ச்சிப்பதே அவருக்கு மிக ப்ரியமானது. "ஸ்வ கர்மணா தம் அப்யர்ச்ய ஸித்திம்

விந்ததி மானவ:" என்ற கீதாவாக்யம் இதை வலியுறுத்துகிறது. ப்ராத ஸ்னனம், உரியவர் ஸந்த்யா, ஜபம் முதலிய அவன் கட்டளையையும் நம் ஸ்வதர்மமுமான ஆன்ஹிகத்தை முடித்து அன்றெல்லாம் உபவாஸமிருந்து இரவில் ஸ்னனம் செய்து மடியுடுத்தி க்ருஷ்ண பூஜை செய்யவேண்டும். அவதார கட்டத்தைப் பாராயணம் செய்யவேண்டும். இரவெலாம் அவர் கதை கேட்டோ, பஜனை செய்தோ கண் விழிப்பது நல்லது. பூஜை செய்ய முடியாதவர் அதிபவித்ரமான அவரது நாமாவை ஜபிக்கவேண்டும்.

"ப்ராயஸ்சித்தானி அசேஷாணி தப: கர்மாத்மகானி வை
யானி தேஷாம் அசேஷாணும் ஸ்ரீ க்ருஷ்ணனு ஸ்மரணம்
பரம்"

என்று கர்மாவின் முடிவில் கூறப்படும் ஸ்லோகம் அவரது நாம மஹிமையைக் குறிக்கின்றது. ஆதலின் அன்றெல்லாம் "ஸ்ரீ க்ருஷ்ண க்ருஷ்ண" என ஜபிக்க வேண்டும் மனதில் அவர் திருவடியை நினைக்கவேண்டும் மறுநாள் காலை பூஜை. அதிதிக்கு அன்னமிட்டு புஜிக்கவேண்டும் இம்மை மறுமை இன்ப மளிப்பவர் கண்ணன்

ஸ்ரீ க்ருஷ்ண சரிதத்தின்

சில ரஹஸ்யார்த்தங்கள்

கீதாசார்யனை ஜாரன், சோரன் என்று பக்தர்கள் பரிவுடன் அழைத்தனர். அன்ய மதத்தினரும் நாஸ்திகரும் அவர் செயலின் மஹிமையையும் அதன் ஆழ்ந்த கருத்தையும் அறியாமல், இதைக்கண்டு "திருடுபவர் கடவுளா? வ்யபிசாரம் செய்பவர் கடவுளா?" என்கின்றனர். எந்த புராணத்தில் இவர் திருடினர், மற்றதைச் செய்தார் எனக் கூறப்பட்டுள்ளதோ அதே புராணம் அடுத்தவரியில் "இவர் திருடிய கதையைக் கேட்டால் திருடியபாபம் அகலும்" எனக் கூறுகிறது. முன்னது ப்ரமாணமானல், பின்னதும் ப்ரமாணமே. ஹரி, ஹர என்பவை (ஹ்ருஞ் ஹரணே) அபஹரிப்பது என்ற தாதுவிலிருந்து தோன்றியவை. ஹரியும் ஹரனும் நமது பாபம், தாபம், மனது இவைகளை அபஹரிகின்றனர். இது நம்மால் வேண்டப்படும் திருடல்லவா? எவர் மனதிலிருந்த பாபமும் மலமும் திருடப்படவில்லையோ அவர் மனதில்தான் கண்ணன் திருடன் என்ற தோற்றம் உண்டாகிறது

தன்னிடம் இல்லாத ஒன்றைப் பிறரிடமிருந்து எடுப்பதே திருடு. யசோதையிடம் வெண்ணை, பால், தயிர் இல்லையா?

இதைத்தானே கண்ணன் திருடியதாகக் கேட்கிறோம். காசு பணத்தை, பண்டம் பாத்ரத்தை, ஆடை ஆபரணங்களைத் திருடினரா? இல்லை. வெண்ணெ, பால், தயிர் இம்மூன்றும் வெண்மை நிறம் வாய்ந்த த்ரவ பதார்த்தங்கள். ஸத்வகுணத்துடன் மனம் உருகப் பஜிப்பதே பக்தி. ஸத்வகுணம் வெண்மை நிறம். ஆதலின் பகவானது லீலா விபூதியை அனுபவிக்கவே ஆயர்பாடியிலே இடைச்சிகளாகத் தோன்றிய உபநிஷத்துகள், மந்த்ரங்கள், அப்ஸரஸ்கள், தபஸ்விகள் ஆகியவர்களின் வீட்டில் புகுந்து, ஸத்வகுணம் வாய்ந்த உருகிய மனத்தையே கொள்ளை கொண்டார் எனக்கருத்து.

ராஸ க்ரீடை

"ரஸவடிவன் ஆத்மா" என்கின்றது வேதாந்தம். அதைப் பார்த்தாலும் நினைத்தாலும் தொட்டாலும் தித்திக்கும் வஸ்து அது. ராஸக்ரீடை நடந்த காலம் கண்ணன் பால் நாற்றம் மாரூப்பாலப்பருவம்! வேணு நாதத்தால் பரவசமாய் வந்த பெண்களோடு விளையாடுகிறார். அன்ய ஸ்த்ரீகளுடன் ஆடிப் பாடித்தான் விளையாடுகிறார். பதியை விட்டு பதிவ்ரதை வரலாமா என்று பகவானே கேட்க, விடமுடியாத மண்ணாசை, மக்களாசை பெண்ணாசை, பொருளாசை இவை எல்லாம் துறந்து, ஜகன் நாதனை நாடிவந்தோம் என கம்பீரமாக அவர்கள் கூறும் சொல்லே இது கேவல ஶ்ருங்காரம்அல்ல எனக் காட்டவில்லையா? பரமசிவனும், ஆஸுரி எனும் முனிவருமே பெண் உருவம் தாங்கி இதில் ஈடுபட்டனர். ஆதலின் இது வ்யபிசாரமல்ல. ப்ரேம பக்தி! துறவிகளும் கானம் பண்ண வேண்டியது கோபிகாகீதம்!!

வஸ்த்ராபஹாரகன்

கோபிகைகளின் வஸ்த்ரத்தை அபஹரித்த விஷயமும் சிற்றின்பத்தில் சிக்குண்டு, தத்துவமறியாது தடுமாடும் மனதிலேதான் களங்கத்தைத்தரும். (1) வஸ்த்ரமில்லாமல் ஸ்னனம் செய்யக் கூடாது என்ற தர்மத்தையும், அபசாரத்தைப் போக்குவது ஶிரஸில் வைக்கும் அஞ்ஜலி என்பதையும் எடுத்துக் காட்டினர் பாலக்ருஷ்ணன். (2) ஆவரண ஶக்தியால் ஆன்மாவை மாயையே மறைக்கும் வஸ்த்ரம். அதை அகற்றி கோபிகைகள் தம் உடலையும் உலகையும் மறந்து, பரமனையே நினைக்கும்படி செய்தார் பரமாத்மா. ஜீவன் முக்தனும் தனியாக ஸ்னன அறையில் இருப்பவனும் வேறெவரையும் காணுததால் வஸ்த்ரமின்றி இருப்பது இயற்கையே.

சீடை, முறுக்கு நிவேதனம் ஏன்?

வஸுதேவ தேவகியிடம் சிறு குழந்தையாகச் சிறையில் தோன்றினர் பகவான். அவர்கள் பகவானை வேண்டும்போது பேசுங்குழந்தையாகத் தோன்றினர். அச்சமயத்திற் கேற்றதும், உடலுக்கு நோய் விளைவிக்காததும், புஷ்டிகரமானதுமான சீடை, முறுக்கை அளிக்க தேவகி கருதினள்.

அவதார ச்லோகம்

तमद्भुतं बालकमंबुजेक्षणं चतुर्भुजं शङ्ख गदार्युदायुधं।
श्रीवत्स लक्ष्मं गलशोभि कौस्तुभं पीतांबरं सान्द्रपयोद सौभगं॥

महार्ह वैडूर्य किरीटकुण्डलत्विषा परिष्वक्त सहस्र कुन्तलं।
उद्दाम काञ्चयङ्गद कङ्कणादिभिः विरोचमानं वसुदेव ऐक्षत॥

தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம்
சதுர்புஜம் சங்க கதார்யுதாயுதம்.
ஸ்ரீவத்ஸ லக்ஷ்மம் களசோபி கௌஸ்துபம்
பீதாம்பரம் ஸாந்த்ர பயோத ஸௌபகம்

மஹார்ஹ வைடூர்ய கிரீடகுண்டலத்விஷா
பரிஷ்வக்த ஸஹஸ்ர குந்தலம்.
உத்தாம காஞ்ச்யங்கத கங்கணாதிபி:
விரோசமானம் வஸுதேவ ஐக்ஷத.

ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டமீ வ்ரதம்

(ஆரம்பத்தில் விக்னேச்வர பூஜை செய்யவும்)

ஸங்கல்பம். சுக்லாம்பரதரம்—ஓம் பூ:—ப்ரீத்யர்த்தம் தேவகீ வஸுதேவ ஸஹித ஸ்ரீ பாலக்ருஷ்ண பூஜாம் கரிஷ்யே

(பிறகு கலச பூஜை, மணியடித்தல்)

த்யானம்

ஸ்தன்யம் பிபந்தம் ஜனனீ முகாப்ஜம்
விலோக்யமானம் முஹுராதரேண
ஸ்ப்ருசந்தமன்ய ஸ்தனமங்குளீபி:
நமோ யசோதாங்க கதம் குமாரம்.

(புஷ்பமும் அக்ஷதையும் கையில் எடுத்து)

வ்ரதாரம்பம் கரிஷ்யேஹம் த்வத்ப்ரஸாதாத் ஜனார்த்தன
தேவீம் ஸ்வச்சாம்பரதராம் ஸர்வாபரண பூஷிதாம்
ஸ்ரீ க்ருஷ்ண வதனாம்போஜ நிக்ஷிப்த குச மண்டலாம்

லாலயந்தீம் ப்ரஸன்னாஸ்யம் கோவிந்தம் பாலகம்முதா
பிபன் வாம ஸ்தனம் த்யாயேத் ஸ்ப்ருஶந்தம் பாணினாபரம்
விலோக்யமானம் ப்ரேமார்த்ரம்முகம் மாதுர் முஹுர்முஹு:
ஸர்வாபரண ஸம்யுக்தம் முக்தா தாம விபூஷிதம்
நூபுரைர்மணி ஸம்பின்னை: கடிஸூத்ரை: அலங்க்ருதை:
கஸ்தூரீ குங்குமோபேதை: திவ்ய காந்தானுலேபிதை:
நவநீத ரஸோத்தாம கந்தவாஸித திங்முகம்
கல்பவ்ருக்ஷ ஸமுத்பூத திவ்ய மால்யை: அலங்க்ருதம்
மந்தஸ்மித லஸத்கண்டம் விலஸத் மணி குண்டலம்
முனிப்ருந்தை: நாரதாத்யை: ஶுக்ராத்யை: தேவதாகணை:
ஸித்த வித்யாதரை: யக்ஷை: ஸமாவ்ருத மனுத்தமம்
ப்ரஸன்ன லோகனைஸ்ஸிக்தை: வர்தயந்தம் ஶுபாஶுபம்
அணிமாதி குணோபேதம் ஏவம் த்யாத்வா ப்ரபூஜயேத்
த்யாத்வா சதுர்புஜம் தேவம் ஶங்க சக்ரகதாதரம்
பீதாம்பரதரோபேதம் லக்ஷ்மீ யுக்தம் விபூஷிதம்
லஸத் கௌஸ்துப ஶோபாட்யம் மேகஶ்யாமம் ஸுலோசனம்
(தேவகீ வஸுதேவ ஸஹிதம் கோபால க்ருஷ்ணம் த்யாயாமி)
(ப்ராணப்ரதிஷ்டை செய்து)

ஆவாஹயாமி தேவேஶம் ஸ்ரீதரம் ஸ்ரீபதிம்ஹரிம்
பாலரூபதரம் விஷ்ணும் ஸச்சிதானந்த விக்ரஹம்
(ஆவாஹயாமி)

தாமோதர நமஸ்தேஸ்து பாலாநுஜ நமோ நம:
ஸ்வர்ண ஸிம்மாஸனம் சாரு ப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருஹ்யதாம்
(ஆஸனம் ஸமர்ப்பயாமி)

புஷ்பாக்ஷத ஸமாயுக்தம் ஏலா கந்த ஸமன்விதம்
பாத்யம் க்ருஹாண தேவேஶ பக்தாபீஷ்ட ப்ரதாயக
(பாத்யம் ஸமர்ப்பயாமி)

கங்கா ஜல ஸமானீதம் ஸுவர்ண கலஶஸ்திதம்
அர்க்யம் க்ருஹாண தேவேஶ வஸுதேவ ப்ரியாத்மஜ
(அர்க்யம் ஸமர்ப்பயாமி)

தாமோதர நமஸ்துப்யம் யமளார்ஜுன பஞ்ஜன
யமுனா ஜல ஸம்யுக்தம் க்ருஹாண ஆசமனீயகம்
(ஆசமனீயம் ஸமர்ப்பயாமி)

தேவ தேவ ஜகன் நாத த்ராஹிமாம் பவஸாகராத்
மதுபர்க்கம் க்ருஹாணேதம் ஸுபத்ராக்ரஜ தே நம:
(மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி)

ஸ்னானம் பஞ்சாம்ருதைர்யுக்தம் நாளிகேர ஜலைர்யுதம்
க்ருஹாணத்வம் மஹா பாஹோ விஶ்வரூப நமோஸ்து தே.
(பஞ்சாம்ருதம் ஸமர்ப்பயாமி)

ஸ்னபயாமி ஸுரஸ்ரேஷ்டம் க்ருஷ்ணம் பால ஸ்வரூபிணம்
ஶுத்தோதகேன பரயா பயக்லேஶ விநாஶனம்
(ஶுத்தோதக ஸ்னானம் ஸமர்ப்பயாமி)

பீதாம்பர த்வயம் தேவ வனமலாம் ச கௌஸ்துபம்
திவ்யான்யாபரணானீஶ க்ருஹாண யதுநந்தன
(வஸ்த்ர யுக்மம் ஸமர்ப்பயாமி)

ராஜதம் ப்ரஹ்ம ஸூத்ரம் ச காஞ்சனம் ச உத்தரீயகம்
க்ருஹாண தேவ தேவேஶ யஶோதாநந்த வர்த்தன.
(உபவீதம் ஸமர்ப்பயாமி)

ஸ்ரீகந்தம் குங்குமோபேதம் கர்பூராதி ஸமன்விதம்
விலேபனம் ஸுரஸ்ரேஷ்ட க்ருஹாண யதுநாயக
(கந்தான் தாரயாமி)

அக்ஷதான் தவளான் திவ்யான் முக்தாபல ஸமப்ரபான்
வஸுதேவ க்ருஹாணத்வம் நமஸ்தே பக்தவத்ஸல
(அக்ஷதான் ஸமர்ப்பயாமி)

ஜாஜீ சம்பக புஷ்பாத்யை: கேதகீ மல்லிகாதிபி:
கரவீரை: பாரிஜாதை: பூஜயாமி ப்ருதக் ப்ருதக்
(புஷ்பை: பூஜயாமி)

அங்க பூஜா

ஸ்ரீ க்ருஷ்ணாய	நம:	பாதௌ	பூஜயாமி
ஸங்கர்ஷணாய	,,	குல்பௌ	,,
கோபாலாய	,,	ஜாநுநீ	,,
ஶகடாஸுர பஞ்ஜனாய	,,	ஊரு	,,
வாஸுதேவாய	,,	குஹ்யம்	,,
ஹரயே	,,	கடிம்	,,
யமுனாவிஹாரிணே	,,	நாபிம்	,,
வஸுதேவாத்மஜாய	,,	உதரம்	,,
சக்ராயுதாய	,,	பாஹூன்	,,
வனமாலாதாரிணே	,,	கண்டம்	,,
பாலாநுஜாய	,,	முகம்	,,
கம்ஸாரயே	,,	கர்ணௌ	,,
கஸ்தூரீ திலகாஞ்சிதாய	,,	லலாடம்	,,
புண்டரீகாக்ஷாய	,,	நேத்ரே	,,
கோபாலக்ருஷ்ண ஸ்வாமினே	,,	ஶிர:	,,

தேவகீ வஸுதேவ ஸஹித பாலக்ருஷ்ணய நம:
ஸர்வாண்யங்கானி பூஜயாமி.
(அஷ்டோத்தர அர்ச்சனை)

தஶாங்கம் குக்குலும் தூபம் ஸுகந்தம் ஸுமனோஹரம்
தூபம் க்ருஹாண தேவேஶ பாலக்ருஷ்ண நமோஸ்து தே.
(பாலக்ருஷ்ணய நம: —தூபமாக்ராபயாமி)

ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் வஹ்னினா யோஜிதம் மயா
க்ருஹாண மங்களம் தீபம் த்ரைலோக்ய திமிராபஹம்
(பாலக்ருஷ்ணய நம: தீபம் தர்ஶயாமி)

நைவேத்யம் க்ருஹ்யதாம் தேவ ரஸை: ஷட்பி: ஸமன்விதம்
ஶஷ்குலீ பக்ஷ்ய போஜ்யைஶ்ச அர்ப்பயாமி முதான்விதம்
(நைவேத்யம் ஸமர்ப்பயாமி)

பூகீபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம்
கர்பூரசூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம்
(தாம்பூலம் ஸமர்ப்பயாமி)

ஸ்வர்ணபுஷ்ப மிதம் தேவ க்ருஹாண புருஷோத்தம
கோடிஸூர்ய ப்ரதீகாஶம் ஸ்வர்ண புஷ்பம் மனோஹரம்
(ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி)

கர்பூரவர்த்தி ஸம்யுக்தம் தீபமாலா மனோஹரம்
நீராஜனம் க்ருஹாணேஶ தேவக்யானந்த வர்த்தன
(பாலக்ருஷ்ணய நம; கர்பூர நீராஜனம் தர்ஶயாமி)

ஶ்ரீக்ருஷ்ண ஸர்வ லோகேஶ நானாபுஷ்பை: ஸுவாஸிதம்
புஷ்பாஞ்ஜலிம் ப்ரதாஸ்யாமி ஸர்வலோக நிவாஸினே
(பாலக்ருஷ்ணய நம: புஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்பயாமி)

தேவ தேவ ஜகன்னாத வாஞ்சிதார்த்த பல ப்ரத
ப்ரதக்ஷிணம் கரோமி த்வாம் ஸம்ஸாரார்ணவ தாரக
(பாலக்ருஷ்ணய நம: ப்ரதக்ஷிணம்)

க்ருஷ்ணய வாஸுதேவாய தேவகீ நந்தனாய ச
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம:
(ஸாஷ்டாங்க நமஸ்காரான் ஸமர்ப்பயாமி)

அபராத ஸஹஸ்ராணி க்ரியந்தே அஹர்நிஶம் மயா
தாஸோயமிதி மாம் மத்வா க்ஷமஸ்வ புருஷோத்தம
(ப்ரார்த்தனை)

(அர்க்யப்ரதான மந்த்ரம்)

ஜாத: கம்ஸ வதார்த்தாய பூபார ஹாரணாய ச
தானவானாம் விநாஶாய வஸுதேவ குலோத்பவ:
(பாலக்ருஷ்ணய நம: ப்ரதமார்க்யம் ஸமர்ப்பயாமி)

பாண்டவானும் ஹிதார்த்தாய தர்ம ஸம்ஸ்தாபனுயச
கௌரவாணும் விநாஶாய வஸுதேவ குலோத்பவ
(பாலக்ருஷ்ணுய நம: த்விதீயார்க்யம் ஸமர்ப்பயாமி)
ஶ்ராவண்யாம் க்ருஷ்ண பக்ஷேது அஷ்டமீ ரோஹிணீ புதா
தஸ்யாம் சந்த்ரோதயே ராத்ரௌ தேவகி கர்ப்ப ஸம்பவ
(பாலக்ருஷ்ணுய நம: த்ரிதீயார்க்யம் ஸமர்ப்பயாமி)
க்ஷீரோதார்ணவ ஸம்பூத அத்ரி நேத்ர ஸமுத்பவ
க்ருஹாணார்க்யம் மயாதத்தம் ரோஹிண்யா ஸஹிதஶ்ஶஶின்
(ஸ்ரீ சந்த்ராய நம: இதமர்க்யம்)
(ஓம் தத் ஸத் க்ருஷ்ணார்ப்பண மஸ்து)

ஸ்ரீ க்ருஷ்ண அஷ்டோத்தரம்

1. ஸ்ரீ க்ருஷ்ணுய நம: 2. கமலாநாதாயநம: 3. வாஸுதேவாய நம: 4. ஸநாதனுய நம: 5. வஸுதேவாத்மஜாய நம: 6. புண்யாய நம: 7. லீலா மானுஷ விக்ரஹாய நம: 8. ஸ்ரீ வத்ஸ கௌஸ்துபதராய நம: 9. யசோதா வத்ஸலாயநம: 10. ஹரயே நம: 11. சதுர்புஜாத்த சக்ர அஸி கதா சங்காத்யுதாயுதாய நம: 12. தேவகி நந்தனுய நம: 13. ஸ்ரீ சாய நம: 14. நந்த கோப ப்ரியாத்மஜாய நம: 15. யமுனு வேக ஸம்ஹாரிணே நம: 16. பலபத்ர ப்ரியானுஜாய நம: 17. பூதனு ஜீவித ஹராய நம: 18. சகடாஸுர பஞ்ஜனுய நம: 19. நந்த வ்ரஜ ஜனுநந்தினே நம: 20. ஸச்சிதானந்த விக்ரஹாய நம: 21. நவனீத விலிப்தாங்காய நம: 22. நவனீத நடாய நம: 23. அனகாய நம: 24. நவனீத நவாஹாராய நம: 25. முசுகுந்த ப்ரஸாத காய நம: 26. ஷோடசஸ்த்ரீ ஸஹஸ்ரேசாய நம: 27. த்ரி பங்கினே நம: 28. மதுராக்ருதயே நம: 29. சுகவாக் அம்ருதாப்தீந்தவே நம: 30. கோவிந்தாய நம: 31. யோகினும் பதயே நம: 32. வத்ஸ வாட சராய நம: 33. அனந்தாய நம: 34. தேனுகாஸுர மர்தனுய நம: 35. த்ரிணீக்ருத த்ருணுவர்த்தாய நம: 36. யமளார்ஜுன பஞ்ஜனுய நம: 37. உத்தாள தாள பேத்ரே நம: 38. தமாள ச்யாமலாக்ருதயே நம: 39. கோப கோபீச்வராய நம: 40. யோகினே நம: 41. கோடி ஸூர்ய ஸமப்ரபாய நம: 42. இளாபதயே நம: 43. பரஸ்மை ஜ்யோதிஷே நம: 44. யாத வேந்த்ராய நம: 45. யதூத்வஹாய நம: 46. வன மாலினே நம: 47. பீத வாஸஸே நம: 48. பாரிஜாதாபஹாரகாய நம: 49. கோவர்த்தன சலோத்தர்த்ரே நம: 50. கோபாலாய நம: 51. ஸர்வ பாலகாய நம: 52. அஜாய நம: 53. நிரஞ்ஜனுய நம: 54. காம ஜனகாய நம: 55. கஞ்ஜ லோசனுய நம: 56. மதுக்னே நம: 57. மதுராநாதாய நம: 58. த்வாரகா நாயகாய நம: 59. பலினே நம: 60. ப்ருந்தா வனுந்த ஸஞ்சாரிணே நம: 61. துளஸீதாமபூஷணுய நம: 62. ஸ்யமந்தக மணேர் ஹர்த்ரே நம: 63. நர நாராயணுத்மகாய நம: 64. குப்ஜா க்ருஷ்ணும்பர தராய நம: 65. மாயினே நம: 66. பரம பூருஷாய நம: 67. முஷ்டிகாஸுர சாணூர மல்ல யுத்த விசாரதாய நம: 68. ஸம்ஸார வைரிணே நம: 69. கம்ஸாரயே நம: 70. முராரயே நம: 71. நரகாந்த காய நம: 72. அனுதி ப்ரும்ம சாரிணே நம:

73. க்ருஷ்ண வ்யஸன கர்சகாய நம: 74. சிசுபால சிரச் சேத்ரே நம: 75. துர்யோதன குலாந்தகாய நம: 76. விதுராக்ரூர வரதாய நம: 77. விச்வரூப ப்ரதர்சகாய நம: 78. ஸத்ய வாசே நம: 79. ஸத்ய ஸங்கல்பாய நம: 80. ஸத்யபாமா ரதாய நம: 81. ஜயினே நம: 82. ஸுபத்ரா பூர்வஜாய நம: 83. ஜிஷ்ணவே நம: 84. பீஷ்ம முக்தி ப்ரதாயகாய நம: 85. ஜகத் குரவே நம: 86. ஜகன் நாதாய நம: 87. வேணு நாத விசாரதாய நம: 88. வ்ருஷபாஸுர வித்வம்ஸினே நம: 89. பாணாஸுர கராந்த காய நம: 90. யுதிஷ்டிர ப்ரதிஷ்டாத்ரே நம: 91. பர்ஹி பர்ஹாவ தம்ஸகாய நம: 92. பார்த்த ஸாரதயே நம: 93. அவ்யக்தாய நம: 94. கீதாம்ருத மஹோததயே நம: 95. காளீய பணிமாணிக்ய ரஞ்ஜித ஸ்ரீ பதாம் புஜாய நம: 96. தாமோதராய நம: 97. யக்ஞ போக்த்ரே நம: 98. தானவேந்த்ர வினாசகாய நம: 99. பரப்ரும்மணே நம: 10'. பன்னகாசன வாஹனாய நம: 101. ஜலக்ரீடா ஸமாஸக்த கோபீ வஸ்த்ராபஹாரகாய நம: 102. புண்ய ச்லோகாய நம: 103. தீர்த்த பாதாய நம: 104. வேத வேத்யாய நம: 105. தயாநிதயே நம: 106. ஸர்வதேவாத்மகாய நம: 107. ஸர்வ க்ரஹ ரூபிணே நம: 108. பராத்பராய நம:

நன்றி: ஒவ்வொரு மாதமும், விசேஷமாக இந்த மாதமும் நம் பத்ரிகைக்கு வேண்டிய படங்கள் போட ப்ளாக் கொடுத்து உதவும் சென்னை மயிலை அல்லயன்ஸ் ஸஹோதரர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

ஸ்ரீ விநாயக சதுர்த்தி

திதிகள் 15. அமாவாஸ்யை கழித்த ப்ரதமை முதல் பௌர்ணமீ வரை சுக்ல பக்ஷம். அதற்கடுத்த ப்ரதமை முதல் அமாவாஸ்யை வரை க்ருஷ்ணபக்ஷ திதிகளாகும். சில வ்ரதங்கள் திதியைப் பின்பற்றியும், சில நக்ஷத்ரங்களைக் கொண்டும், சில வாரத்தைக் கொண்டும் தோன்றினவை. யம த்விதீயை, அக்ஷபத்ரிதீயை, விநாயக சதுர்த்தி, ரிஷிபஞ்சமி, ஸ்கந்த ஷஷ்டி, ரதஸப்தமி, ஜன்மாஷ்டமி, ஸ்ரீராமநவமி, விஜய தசமி, வைகுண்ட ஏகாதசி, ச்ரவணத்வாதசி, க்ருஷ்ணாங்கார த்ரயோதசி, நரக சதுர்த்தசி, சித்ரா பௌர்ணமி முதலியவை திதி வ்ரதங்களாம். விநாயக சதுர்த்தி வ்ரதம் காசி முதல் கன்யாகுமரி வரை கொண்டாடப்படுகிறது. மஹாராஷ்ட்ர தேசத்தில் விநாயக சதுர்த்தி மிக விமரிசையாய் 10 நாள் கொண்டாடப்படுகிறது. விநாயக சதுர்த்தி வ்ரதத்தை ஆரம்பித்து, ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி பூஜை செய்து, சதுர்த்தி வ்ரத உத்யாபனம் செய்வது நம் நாட்டு வழக்கம். பலவிதமான ஸித்திகளைத் தருவதால், பலரும் இதைக் கொண்டாடுவர். எந்த சுபமான கார்யத்தை ஆரம்பித்தாலும் முதலில் விநாயக பூஜை செய்கிறோம். இவ்விநாயகரைச் சாணியினாலும், சந்தனத்தாலும் மஞ்சளாலும், வெல்லத்தாலும், களிமண்ணினாலும், வெள்ளெருக்கின் வேரினாலும், மற்ற லோகங்

களாலும் செய்கிறோம். விநாயகர் இல்லாத சிவாலயத்தைக் காணமுடியாது. சில விஷ்ணு ஆலயங்களிலுங்கூட திருநாமத்துடன் விநாயகரைக் காணலாம். விநாயகரைப்பற்றி கூறாத புராணமில்லை. சில அஸ்வத்த மரத்தின் அடியிலும் இவரைத்தர்சிக்கலாம். சுருங்கச் சொல்லின், மற்ற தேவதைகளைவிட, விநாயகரே விசேஷமாகக் கொண்டாடப்படுகிறார்.

வேத விநாயக தத்வம்

வேதம் இவரை "ஜ்யேஷ்ட ராஜன்" என்றும், "ப்ரும்மணஸ்பதி" என்றும் அழைக்கின்றது. "ஜ்யேஷ்ட" என்ற சொல் முதலில் உதித்தவர் என்றும், "ப்ரும்மணஸ்பதி" எனில் வேதத்திற்குத்தலைவன் என்றும் பொருள். அதர்வ ஸிரஸ் இவரே பரமாத்மா என்கிறது. திருக்குறள் முதல் பாட்டு இவரது ஸ்வரூபத்தை சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. "அ" என்பது எழுத்துக்களுக்கெல்லாம் முதலானது போல் உலகிற்கெலாம் ஆதிபகவானே முதல்என்று கருத்து வாய்ந்த அந்த குறள், நிர்குணனாகவும், ஸகுணனாகவும், அக்ஷரமாகவும், க்ஷரமாகவும், உள்ள முழு முதற் கடவுள் விநாயகர் என எடுத்துக்காட்டுகிறது. "அ" எனும் எழுத்தின்றி வேறெந்த எழுத்தும் எப்படி ஒலிக்காதோ அங்ஙனமே விநாயகரின்றி வேறு தெய்வ பூஜை இல்லை. ஸ்ரீவைஷ்ணவர்களும் "விஷ்வக்ஸேநர்" என்ற பெயருடன் இவரைப்பூஜிக்கின்றனர்.

நமது உடலில் கூறப்படும் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாஹதம், ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களில் மூலாதாரமாக உள்ளவர் இவர். யோக சாஸ்த்ரம் ப்ரணவ நாத ரூபியாய் இவரைக்கூறுகிறது. ப்ரணவத்திற்கு அகாரமும், உகாரமும், மகாரமும் சேருதல் வேண்டும். ப்ராணிகளது முதல்நாதம் அகாரமாம். குழந்தைகள் "அம்மா, அப்பா, அக்கா" என அகாரத்தை முன்னிட்ட பதங்களையே முதலில் கூறுகின்றன. கன்றும் மாடும் 'அம்மே' என்றே கத்துகின்றன. யானையினது ஒலியோ ப்ரணவ ஒலிபோலாம். ஓங்காரரூபி கஜமுகன். விநாயகரது முகம் எங்கும் யானைமுகமே. சிதம்பர க்ஷேத்திரத்தில் தெற்கு வீதியிலுள்ள கணபதியே நரமுக கணபதியாகக் காணப்படுகிறார். யானை ப்ராணிகளில் மிகப் பெரிய உரு அமைந்தது. ப்ரும்ம என்ற சொல் "பெரியதாயுள்ளது. எங்கும் நிறைந்தது" என்ற பொருள் கொண்டதாம். எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டவர் பரமாத்மா. அவர் மண்ணும், விண்ணும், எல்லாமாக இருப்பவர். இந்த உண்மையை ஊனக்கண்ணுக்குக் காண்பிக்கவே விநாயகர் யானைமுகமாகவும், பெரிய உதா

முன்னவராகவும் உருகொண்டு அமைக்கப்படுகிறார். விநாயகர் எனில் தனக்கு மேல் நாயகர் இல்லாதவர் என்று பொருள். இவையெல்லாம் அநாதியாய், முழுமுதற் கடவுளாய் உள்ளவர் இவர் என விளக்குகின்றன. மஞ்சள், சாணி, சந்தனம், மண், வெல்லம் முதலிய எல்லா பொருள்களாலும் இவரை அமைப்பதும், விநாயகபூஜையில் உபயோகிக்கப்படும் பூமியிலுண்டான ஸகலவிதமான புஷ்பங்களும் பத்ரங்களும் (இலைகளும்) பழங்களும், பக்ஷ்யங்களும் இவர் ஓங்கார ஶப்தத்தால் கூறப்படும் பரமாத்மா என எண்பிக்கின்றன. வேதம் உபநிஷத் அனைத்தும் இவர் எங்கும் நிறைந்த எல்லாமாய் அமைந்த ஓங்கார வாச்யனான பரமாத்மா என எடுத்துக்காட்டுகின்றன.

புராண விநாயகர் கதை

வேதம் வகுத்த தத்துவத்தை விளக்கிக்கூறவந்தவை புராணங்கள். விநாயகரை ஸகுணமாக வர்ணித்து அவர் அவதாரத்தையும் லீலையையும் விஸ்தாரமாக 18 புராணங்களும் கூறினும், விநாயக புராணம் அல்லது பார்க்கவ புராணம், முத்கலபுராணம் இவை இரண்டும் பூர்ணமாக விநாயகரைப்பற்றியே வர்ணிக்கின்றன. இவரது உலகம் ஆனந்த புவனம் எனப்படும், இது கைலாஸத்தின் அருகே உளது. ஆங்கு ஸித்தி, புத்தி என்ற இரு மனைவிகளுடனிருந்து மும்மூர்த்திகள் மூலம் உலகைப்படைத்து, பரிபாலித்து, ஒடுக்குகிறார். பக்தர்களை ரக்ஷிக்கப் பலரிடம் பல அவதாரம் செய்கிறார். பார்க்கவ புராணத்தில், இளையவனான தனது தம்பி குமரனுக்கு தன் தத்துவத்தை விநாயகரே வர்ணிக்கிறார். அதில் 12 அவதாரங்கள் கூறப்பட்டன.

1. **வக்ர துண்ட கணபதி:** இவரே முதலில் உருவெடுத்து ஸித்தி, புத்தி என்ற இரு மனைவிகளை மணந்து, மும்மூர்த்திகளைப்படைத்து, அவர்களுக்கு சதுர்த்தி வ்ருதத்தை உபதேசித்து சக்தி அளித்தவர்.

2. **சிந்தாமணி கணபதி:** அபிஜித் எனும் அரசன்மூலம் குணவதி என்பவளிடம் அவதரித்து, சிந்தாமணியைத் தந்தைக்குத் தந்தார்.

3. **கஜானன கணபதி:** பார்வதீ பரமேஶ்வரரிடம் அவதாரம் செய்து, கஜாஸுரனைக் கொன்றார். விநாயக சதுர்த்தியில் இவருடைய அவதாரம்.

4. **விக்ன விநாயகர்:** வரேண்யன், புஷ்பவதீ என்ற தம்பதிகளிடம் தோன்றி விக்னங்களை அகற்றினர்.

5. **மயூரேஶகணபதி:** ஸங்கடஹர சதுர்த்தி வ்ருதம் செய்த பார்வதீ பரமேஶ்வரரிடம் அவதரித்து, ப்ரும்ம புத்ரிக

ளான ஸித்தி புத்திகளை மணந்தார். மயில் வடிவனை ஸிந்து எனும் அஸுரனை ஜயித்து, அவனை வாஹனமாகக் கொண்டு மயூரேசன் என அழைக்கப்படுகிறார்.

6. பாலசந்த்ரர்: அநலன் எனும் அஸுரனை அடக்க ஸகல தேவரும் விநாயகரை வேண்ட, அவர் ப்ரும்ம சாரியாக வந்து அவனை விழுங்கினார். அந்த தாபம் அகல, மிகச்சீதள மான சந்த்ரனை நெற்றியில் வைத்துப் பால சந்த்ரர் எனப்படு கிறார்.

7. தூமகேது: புகைவடிவனை அஸுரனைக் கொல்ல மாதவன், ஸுமுதா என்ற ராஜ தம்பதிகளிடம் தோன்றி புகையால் அவனைக் கொன்று தூமகேது என அழைக்கப் படுகிறார்.

8. கணேசர்: பலி எனும் அரக்கனைக் கொல்லும்படி அமரர் அனைவரும் வேண்ட; கணங்களுடன் சேர்ந்து வந்து அவனை வென்றார். ஆதலின் கணேசர் எனப்படுகிறார்.

9. கணபதி: கஜாஸுரனைக் கொல்ல பார்வதி பரமேச் வரர்கள் சித்ரத்தில் உள்ள யானை தம்பதிகளைப் பார்க்கும் போது அங்கிருந்து அவதரித்தவர்.

10. மஹோத்கடர்: அதிதியிடம் கச்யபர் ப்ராத்தனை யால் அவதரித்து தேவாந்தக நராந்தகர்களைக் கொன்றார்.

11. டுண்டுகணபதி: காசியில் விளங்கும் மூர்த்தி. தாரா ஸுரன் என்ற அரக்கனைக் கொல்ல உமை சிவ முகத்திலிருந்து ஐந்துமுக கணபதியைப் படைத்தாள். நாகப்பட்டிணம் நீலாய தாக்ஷி அம்மன் ஸன்னதியிலும் மற்றும் சிலவிடங்களிலும் பஞ்சமுக கணபதியைக் காணலாம்.

12 வல்லப கணபதி: பார்வதீ பரமேஸ்வரரது ப்ரார்த் தனைக்கு இணங்கி, புத்ரனாக அவதரித்து மரீசியின் பெண்ணான வல்லபையை மணந்தார்.

இங்ஙனம் விநாயக அவதாரம், லீலை, சத்ரு சிக்ஷணம், பக்த ரக்ஷணம் முதலியன வர்ணிக்கப்படுகின்றன. இவையன்றி, உச்சிஷ்டகணபதி, ஹேரம்பகணபதி முதலிய பற்பல பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

விநாயகர் ப்ரும்மசாரியா க்ருஹஸ்தரா?

சில இடங்களில் இரு மனைவிகளுடனும், சில இடங்களில் ஒரு பத்னியுடனும், இன்னும் சில இடங்களில் ப்ரும்மசாரியாக வும் காணப்படுவதால் ஸந்தேஹம் தோன்றக்கூடும். ஆனந்த புவனம் என்ற இடத்தில் ஸித்தி, புத்தி என்ற இரு சக்தி களோடுதான் இருக்கிறார். ஞானம் என்பது ப்ரும்ம ஸ்வ

ரூபம். அதுவே விநாயகர். புத்தி இச்சாஶக்தி. ஸித்தி க்ரியா ஶக்தியாகும். இச்சாஶக்தியும் க்ரியாஶக்தியும் கூட இருந்தால்தான் க்ஞானம் ஒரு கார்யத்தைச் செய்யமுடியும். ஸ்ருஷ்டி, பரிபாலம் இவ்விரண்டையும் நடத்தும்போது விநாயகர் க்ருஹஸ்தாஶ்ரமியே. ப்ரபஞ்சம் ஒடுங்கும்போது இச்சை, க்ரியை எனும் ஶக்திகளையும் தனக்குள்ளே லயப்படுத்தி, கேவல க்ஞானமயமாய் நிற்கிறார். இதுவே ப்ரும்ம சர்யமாம். அன்றியும், ஒரு இச்சைகொண்டு ஒரு கார்யத்தைத் துவக்கி விட்டால், இச்சையும் க்ரியையும் க்ஞானத்திடமே லயமாகி, க்ஞானமே ஏகாக்ரமாக முக்யமாய் நிற்கின்றது. அந்த நிலை ப்ரும்ம சர்யமாம். உலகில் சில அஸுரர்கள் அக்ஞானத்தின் உருவாகத்தோன்றி, ஸாதுக்களை ஹிம்ஸிக்கின்றனர். அந்த அக்ஞானத்தை அகற்ற, அதாவது அஸுரனை ஸம்ஹாரம் செய்யும்போது க்ஞானமே முன் நிற்க வேண்டும். பெண் வடிவமான இச்சா க்ரியா ஶக்திகள் கூட இருந்தால் கருணை அதிகமாகி, அஸுர சிக்ஷை நடைபெறாது. அதனால் 12 அவதாரங்களில சிலவை ப்ரும்மசாரியாகவே இருக்கின்றன. விநாயகர் ப்ரும்மசாரியுமாவர். க்ருஹஸ்தருமாவர். இரண்டும் பூஜிக்கத்தக்கதே.

மோதகமும் முதல் பூஜையும் ஏன்?

எப்பொழுதும் மற்ற எல்லா பக்ஷங்களையும்விட இவருக்கு விஶேஷமாக மோதகமே செய்யப்படுகிறது. இதற்கு புராண கதை இருவகை ஸமாதானம் கூறுகிறது.

(1) ஶிவகுமாரர் இருவர் விநாயகனும் ஸுப்ரஹ்மண்யனுமாம். இருவரும் தந்தை தாயிடம் இருக்கும்போது தேவர்கள் அமிருதத்தினால் பூர்ணமான மோதகம் ஒன்றைக் கொண்டுவந்து ஶிவனிடம் அளித்தனர். இதை யாருக்கு அளிப்பது என ஶிவன் சிந்தை கொண்டார். இருவரில் எவர் தன் பாபத்தை நீக்கிக் கொண்டு முதலில் வருகிறாரோ அவருக்கே மோதகம். அவருக்கே முதல் பூஜை என அமரர் கூறினர் குமரன் மயில் மீதேறி, புண்ய நதிகளில் புனலாடி பாபத்தை அகற்றிவரச் சென்றார். விநாயகரோ அருகிலுள்ள அன்னையையும் பிதாவையும் வலம் வந்து மோதகத்தைப் பெற்றார். முதல் பூஜையும் அவருக்கே என்றார் மாதேவன். அறிவுக் களஞ்சியமான வேதம் விசாலமானது. வேதப் பொருளான குஹன் வேதவிதிப்படி பாபக்ஷய தீர்த்த யாத்ரை முதலிய கருமங்களைச் செய்தார். ப்ரணவ வடிவனான கணேஶனோ வேத வேத்யனான பிதாவை வலம்வந்து குறுக்கு வழியில் சுருக்கமாக பாபம் நீங்கும் வழி கண்டார். ப்ரதக்ஷிணம் என்

பது உடலால் ப்ரணவம் எழுதுவதாம். அன்றுமுதல் இவருக்கு மோதகமும் முதற் பூஜையும் விதித்தமானது. த்ரிபுரஸம்ஹாரத்திற்குக் கிளம்பிய த்ரிபுராரி விநாயகனைப் பூஜிக்காமல் சென்றதால், தேரின் அச்சு அறுந்தது. அந்த இடமே அச்சரப்பாக்கம் என இன்றும் ப்ரஸித்தமாயிருக்கிறது. அவர் ப்ரணவம். குமரன் வேதார்த்தம். ஓம் என்று கூறியே வேதத்தை ஆரம்பிக்க வேண்டும்.

(2) ஸப்த ரிஷிகள் தேவபூஜை செய்யும்போது விநாயகர் பால்யப் பருவத்தில் அங்கு சென்றார். அவர்கள் ப்ரத்யக்ஷ கணேசன் எதிரில் வருவதை விட்டு, சோணபத்ரம் என்ற சிலையில் அவரை அர்ச்சித்தனர். அவர் அந்த சிலையைத் துதிக்கையால் எடுத்து விழுங்கி, தானே விநாயகர் என எண்பித்தார். அப்பொழுதும் அவர்கள் உண்மை அறியாமல் வேறொரு சிலையில் விநாயகரை அர்ச்சித்தனர். அருந்ததி அம்மாள் விநாயக தத்வம் உணர்ந்தவள். உள்ளே ருசியான பூர்ணத்தை வைத்து, மேலே வெளுப்பான மாவினால் அண்டம் போல் செய்து, விநாயகர் தம் வீடு வரும்போது வஸிஷ்டரிடம் அளித்து ப்ரத்யக்ஷமாகப் பூஜை செய்யச் சொன்னாள். அதைக் கண்டு மகிழ்ந்தார் விநாயகர். அண்டத்திற்குள் ரஸமான தான் பூர்ணமாக இருப்பதை இவள் உணர்ந்தாள், என்று அவர்களுக்கு ஆனந்த வடிவமான ஜீவன் முக்தியை அளித்தார். இங்ஙனம் அர்ச்சிப்பவருக்கு ஆனந்த, மோத, ப்ரமோதம் கிடைக்கும் என எண்பிக்கவே ஸதா மோதகத்தை கரத்தில் தாங்கி நிற்கிறார். அதனால் "முதாகராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்" என கணேசபஞ்சரத்னத்தில் ஆதி ஆசார்யர் வர்ணிக்கிறார். **காரமான பூர்ணம் நிறைந்த கொழுக்கட்டை பூஜார்ஹமல்ல.**

குட்டிக் கொள்ளுதலும் தோபகர்ணமும்

இவ்விரண்டும் விநாயகர் ஸன்னதிக்கே தனியாக ஏற்பட்ட சிறப்பான முறை. இதற்கும் புராணம் இருவகையாகக் கதை கூறுகின்றது.

(1) சிவனிடமிருந்து உயர்ந்த சிவலிங்கத்தைப் பெற்று ராவணன் அதை லங்கையில் ப்ரதிஷ்டை செய்யக் கருதினான். அப்படிச் செய்து முடித்துவிட்டால் அவனை வெல்ல ஒருவராலும் இயலாது. அமரர் அனைவரும் கலந்து யோசித்து, விநாயகரை வேண்டினர். அவர் ப்ரும்ம சாரி வடிவந்தாங்கி ராவணனருகே சென்றார். இவரது செயலால் அவனுக்கு மூத்ர விஸர்ஜனம் செய்ய அவஸரம் நேர்ந்தது. சிவலிங்கம் முதலிய

சிறந்த வஸ்துக்களைப் பூமியில் வைக்கலாகாது. கையில் வைத்துக் கொண்டு ஜலமலம் கழிக்கக்கூடாது. அன்றியும் இதைக் கீழே வைத்தால் மறுபடி எடுக்க முடியாது என ஶிவன் எச்சரிக்கை செய்திருந்தார். ஆதலின் அவன் யத்ருச்சையாய் வந்த ப்ரும்மசாரியிடம் அதை அளித்து, தான் சுத்தி செய்துகொண்டு வருமளவும் கையில் வைத்திருக்கும்படி கூறினன். அவரும் அதற்கு இசைந்து, "மும்முறை கூப்பிடுவேன். அதற்குள் நீ வாராவிடில் பூமியில் வைத்து விடுவேன்" என்றார். ராவணன் ஜலவிஸர்ஜனம் செய்யும்போது விநாயகரது மாயையால் மேன்மேலும் மூத்ரம் வந்த வண்ணமே இருந்தது. விநாயகரும் தான் சொன்னபடி மும்முறை அழைத்தும் அவன் வாராததால் லிங்கத்தை பூமிமீது வைத்துச் சென்றார். வெகு ஶ்ரமத்துடன் அந்த வேலையை முடித்துக் கொண்டு வந்து ஶிவலிங்கத்தைத் தூக்கினன். அது வாராமல், பூமியில் ஊன்றிவிட்டது. தஶமுகன் சினங்கொண்டு, ஓடிப்பிடித்து ப்ரும்மசாரி தலையில் குட்டினன். அவர் தனது நிஜரூபத்தை எடுத்தார். பயந்து அரக்கன் "ஸ்வாமி, யான் செய்த தவறை மன்னிக்கவும். அதற்காக எனது இரு கரங்களால் என்னையே குட்டிக்கொள்கிறேன்" என்றான்.

(2) கஜமுகாஸுரனை விநாயகர் அடித்துக் கீழேதள்ளிய பின் அவன் பெருச்சாளி உருவெடுத்து போர்புரிந்தான். அதனிலும் தோல்வியுற்று அவருக்கு வாஹனமாகி, அவரைப் போற்றிப் புகழ்ந்தான். "யாது வரம் வேண்டும்?" என விநாயகர் கேட்க, தான் அரசனாக இருந்தபோது தேவர்களுக்குத் தந்த சிக்ஷையான தலையில் குட்டிக் கொள்ளுதல், இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு தோபகர்ணம் (த்வாப்யாம் கர்ண) என்பவைகளை நம் ஸன்னதியில் உமது பக்தர்கள் செய்யவேண்டும்" எனக் கேட்டான். அன்று முதல் இந்த வழக்கம் ஏற்பட்டது என ஒரு புராணம் கூறுகிறது.

இவைகளை உற்றுநோக்குபவருக்கு உயரிய தத்துவம் ஒன்று தோன்றும். அஃது யாது? உள்ளங்காலிலிருந்து உச்சம் தலை வரை நமது நரம்புகள் கத்திரிக்கோல் போல் செல்கின்றன. அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருப்பதால் (தோப கர்ணத்தால்) அந்த நாடிகள் சுருங்கி நிற்காமல் நீண்டு உள்ளே ரத்தம் ஓட நன்கு வழி கொடுக்கும். சுத்த ரத்தம் மூளைக்குச் செல்வதால் சாந்தமான நினைவுகள் தோன்றும். இரு கரங்களாலும் இருபுறமும் குட்டிக் கொள்வதால் ஸஹஸ்ராரம் என்ற இடத்திலிருந்து (உண்மை உணர்ந்து உபாஸிக்கும்) யோகிகளுக்கு அமிருதம் சிந்தும். அதன் மூலமாக ஆனந்தம் உண்டாகும். இவ்வனுபவம் யோகிகளுக்கு ப்ரத்யக்ஷம், மற்றவர் விஷயம்

உணராமலே இதை அனுஷ்டித்து வந்தால், விஷயம் அறிந்த பின் அனுபவிக்கலாம் என்ற உயர் கொள்கையால் எல்லோரும் இதைக் கைகொள்ளும்படி பெரியோர் ஏற்படுத்தினர் போலும்.

பிள்ளையார் சுழி ஏன் போடுகிறோம்?

"ஏகதந்தர்" என விநாயகருக்கு ஒரு பெயருண்டு. ஒரு கொம்பு உள்ளவர் என்பது அதன் பொருள். ஏன் ஏகதந்தனை ஆனார் என்பதற்கும் இருகதைகள் உள. (1) எந்த ஆயுதத்தினாலும் தனக்கு மரணம் வரக்கூடாது என வரம்பெற்ற அஸுரனைக் கொல்ல தனது தந்தத்தில் ஒன்றை முறித்துக்கொன்றார். (2) வேதவ்யாஸர் தான் இயற்றிய மஹாபாரதத்தை எழுத விநாயகரையே வேண்டினார். அவர் தனது தந்தத்தில் ஒன்றை முறித்து, கூறிய எழுத்தாணியாகக்கொண்டு எழுதினார். அதனால் அவர் ஏகதந்தர் என பாரதம் கூறுகிறது. உலகில் முதலில் எழுத்தைக் கண்டு எழுத ஆரம்பித்தவர் விநாயகரே. அது வரை ஒருவர் சொல்வதை ஒருவர் கேட்டு ஒலி வடிவமாகவே இருந்தன வேதம், புராணம் முதலியவை. கலியில் அத்தகைய அறிவின் முதிர்ச்சியிராது எனக் கண்ட வ்யாஸர் வேண்டியபடி ஒலிக்கு உருவம் அளித்து எழுத்தாக்கினார் விநாயகர். அந்த ஞாபகத்திற்காக, வளைந்த துதிக்கைபோல் பிள்ளையார் சுழி என முதலில் அடையாள மிட்டுப்பின்னர் எழுத ஆரம்பிப்பது சான்றோர் வழக்கம்.

தூர்வையின் பெருமையும் துளஸி வேண்டாமையும்

விநாயக பூஜைக்கு தூர்வை எனும் அருகம்புல் மிக உயர்ந்தது. விநாயகர் ஜோதி, சுடர், ஞானத்தீ அல்லவா? எவருக்கும் தன் இனத்தைச் சார்ந்ததில ப்ரியமுண்டு. தூர்வையோ உஷ்ண வீர்ய முள்ளது. அதன் சூடு அளவு கடந்தது. நடராஜமூர்த்தி தீயை ஏற்றதுபோல் தூர்வையை இவர் விருப்புடன் ஏற்கிறார் அநலன் என்ற அரக்கனை விழுங்கியபோது அவன் அவர் உள்ளே சென்று ஆங்குள்ள பதினான்கு உலகையும் தவிக்கச் செய்தான். அது ஶமனமாக தூர்வையைத் தரித்தார் என்பது புராணக்கூற்று. உஷ்ணம் உஷ்ணத்தால் அகலும். அமிருதக் கடலிலிருந்து உண்டானது தூர்வை. அது துஸ்வப்னத்தை போக்க வல்லது என வேதம் கூறுகிறது. ஶாந்திகரமான சில கர்மாவில் தூர்வா ஹோமம் செய்கிறோம்.

துளஸீ தேவி பல்லாண்டு தவம் புரிந்து விநாயகரை மணக்க விரும்பினாள். அவர் "நீ விஷ்ணுவுக்குப் பத்னியாக

இரு" என்று பல முறை கூறியும் அவள் நிபந்தம் செய்தாள். அதைக்கண்டு கோபங்கொண்டார் விநாயகர். "செடி வடிவமாக ஆவாய் நீ. எனது (நித்ய) பூஜைக்கு நீ ஏற்றவளல்ல" என சபித்தார். ஆதலால் விநாயக சதுர்த்தி தவிர மற்ற நாட்களில் துளஸியால் விநாயகரை பூஜிக்கக்கூடாது.

ஒவ்வொரு ஶுக்லபக்ஷ சதுர்த்தியிலும், விசேஷமாக விநாயக சதுர்த்தி அன்றும் சந்த்ரனைப் பார்க்கலாகாது. பார்ப்பவர் படாப்பழிக்கு ஆளாவர். பக்தரது விக்நத்தை அகற்றுவதாலும், துஷ்டருக்கு விக்னத்தை அளிப்பதாலும் "விக்நேஶர்'

ஸ்ரீ விநாயக வ்ரதம்

ஸங்கல்பம். ஶுக்லாம் பரதரம்.... ஓம்பூ:—ப்ரீத்யர்த்தம்.... வரஸித்தி விநாயகம் உத்திஶ்ய|வரஸித்தி விநாயக ப்ரீத்யர்த்தம் கல்போக்த ப்ரகாரேண யாவச்சக்தி த்யான ஆவாஹனாதி ஷோடஶோபசார பூஜாம் கரிஷ்யே.

கரிஷ்ய மாணஸ்ய கர்மண: அவிக்னேன பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ மஹாகணபதி பூஜாம் கரிஷ்யே. (மஞ்சள் பிம்பத்தில் விக்நேஶ்வரரை த்யானம் முதலியன செய்து, யதாஸ்தானம் செய்து விட வேண்டும்.) (மணியடித்தல், கலஶ பூஜை முதலியன வழக்கம்போல் செய்யவும்.)

த்யானம்

ஏகதந்தம் ஶூர்ப கர்ணம் கஜவக்த்ரம் சதுர்புஜம்.
பாஶாங்குஶதரம் தேவம் த்யாயேத் ஸித்திவிநாயகம்.
உத்தமம் கண நாதஸ்ய வ்ரதம் ஸம்பத்கரம் ஶுபம்.
பக்தானும் இஷ்ட தாதாரம் ஸர்வ மங்கள காரகம்.
த்யாயேத் கஜாநனம் தேவம் தப்த காஞ்சன ஸன்னிபம்.
சதுர்புஜம் மஹாகாயம் ஸர்வாபரண பூஷிதம்.

(அஸ்மின் பிம்பே ஸுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி)
அத்ராகச்ச ஜகத்வந்த்ய ஸுரராஜார்சிதேஶ்வர
அநாத நாத ஸர்வக்ஞ கீர்வாண ஸுரபூஜித.
(ஆவாஹயாமி)

அநேக ரத்ந கசிதம் முக்தாமணி விபூஷிதம்
ரத்ந ஸிம்மாஸனம் சாரு ப்ரீத்யர்த்தம் ப்ரதி க்ருஹ்யதாம்
(ஆஸனம் ஸமர்ப்பயாமி)

கௌரீ புத்ர நமஸ்தேஸ்து ஶங்கர ப்ரிய நந்தன
பக்த்யா பாத்யம் மயா தத்தம் க்ருஹாண த்விரதானன
(பாத்யம் ஸமர்ப்பயாமி)

வ்ரதமுத்திஶ்ய விக்நேஶ கந்த புஷ்பாக்ஷதைர் யுதம்
க்ருஹாணார்க்யம் மயாதத்தம் கஜாநன நமோஸ்து தே.
(அர்க்யம் ஸமர்ப்பயாமி)

அநாத நாத ஸர்வக்ஞ தேவராஜ ஸுபூஜித
க்ருஹாண ஆசமனம் தேவ பக்த்யா தத்தம் மயா ப்ரபோ.
(ஆசமனீயம் ஸமர்ப்பயாமி)

ததிக்ஷீர ஸமாயுக்தம் மத்வாஜ்யேன ஸமன்விதம்
மது பர்க்கம் க்ருஹாணேதம் கஜவக்த்ர நமோஸ்து தே.
(மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி)

மத்வாஜ்ய ஶர்கராயுக்தம் பல க்ஷீர ஸமன்விதம்
க்ருஹாண ஸர்வ வரத பக்தானும் இஷ்டதாயக
(பஞ்சாமிருத ஸ்னானம் ஸமர்ப்பயாமி)

கங்காதி ஸர்வ தீர்த்தேப்ய: ஆஹ்ருதை: விமலைர்ஜலை:
ஸ்நானம் குருஷ்வ பகவன் உமா புத்ர நமோஸ்து தே.
(ஶுத்தோதக ஸ்னானம் ஸமர்ப்பயாமி)
(ஸ்னானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி)

ரக்த வஸ்த்ர த்வயம் தேவ தேவராஜஸுபூஜித
பக்த்யா தத்தம் க்ருஹாணேதம் லம்போதர ஹராத்மஜ
(வஸ்த்ரயுக்மம் ஸமர்ப்பயாமி)

ராஜதம் ப்ரஹ்ம ஸூத்ரஞ்ச காஞ்சனஞ்ச உத்தரீயகம்
க்ருஹாண ஸர்வ தர்மக்ஞ பக்தானும் இஷ்டதாயக
(உபவீதம் ஸமர்ப்பயாமி)

சந்தன கரு கர்பூர கஸ்தூரீ குங்குமான்விதம்
விலேபனம் ஸுரஶ்ரேஷ்ட ப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருஹ்யதாம்
(கந்தான் தாரயாமி)

அக்ஷதான் தவளான் திவ்யான் ஶாலீயான் தண்டுலான் ஶுபான்
ஹரித்ரா சூர்ண ஸம்யுக்தான் ஸம்க்ருஹாண கணாதிப.
(அக்ஷதான் ஸமர்ப்பயாமி)

ஸுகந்தீனி ஸுபுஷ்பாணி ஜாஜீ குந்த முகானி ச
ஏகவிம்ஶதி புஷ்பாணி க்ருஹாண கண நாயக.
(புஷ்பாணி ஸமர்ப்பயாமி)

(அங்க பூஜா)

கணேஶாய	நம:	பாதௌ	பூஜயாமி
ஏகதந்தாய	,,	குல்பௌ	,,
கௌரீபுத்ராய	,,	ஜங்கே	,,
விக்நராஜாய	,,	ஜாநுனீ	,,
ப்ரஹ்மசாரிணே	,,	ஊரூ	,,
ஹேரம்பாய	,,	கடிம்	,,
பார்வதீ நந்தனாய	,,	குஹ்யம்	,,
ஈஶபுத்ராய	,,	மேட்ரம்	,,
கண நாதாய	,,	நாபிம்	,,
லம்போதராய	,,	உதரம்	,,
விநாயகாய	,,	வக்ஷஸ்தலம்	,,
விக்னபர்வத தம்போளயே	,,	பார்ஶ்வௌ	,,
விகடாய	,,	ஹ்ருதயம்	,,
ஸ்தூலகண்டாய	,,	கண்டம்	,,
ஸ்கந்தாக்ரஜாய	,,	ஸ்கந்தௌ	,,
பாஶஹஸ்தாய	,,	ஹஸ்தான்	,,
சதுர்புஜாய	,,	பாஹூன்	,,
கஜமுகாய	,,	முகம்	,,
ஏகதந்தாய	,,	தந்தௌ	,,
விக்ன நேத்ரே	,,	நேத்ரே	,,
ஶூர்பகர்ணாய	நம:	கர்ணௌ	,,
பாலசந்த்ராய	,,	லலாடம்	,,
உமாபுத்ராய	,,	நாஸிகாம்	,,
விக்னஹந்த்ரே	,,	சுபுகம்	,,
ஶுண்டதண்டாய	,,	ஓஷ்டௌ	,,
ஹரஸூநவே	,,	கண்டஸ்தலம்	,,
குஹாக்ரஜாய	,,	கசான்	,,
ஸர்வேஶ்வராய	,,	ஶிர:	,,
விக்நராஜாய	,,	ஸர்வாண்யங்கானி	,,

ஏகவிம்ஶதி பத்ர பூஜா

ஸுமுகாய	நம:	மாசீ பத்ரம்	பூஜயாமி
கணாதிபாய	,,	ப்ருஹதிபத்ரம்	,,
உமாஸுதாய	,,	பில்வ பத்ரம்	,,
கஜானனாய	,,	தூர்வாயுக்மம்	,,
ஹரஸூனவே	,,	துர்தூர பத்ரம்	,,

MAHAMAHOPADHYAYA

லம்போதராய	நம	பதரீ	பத்ரம்	பூஜயாமி
குஹாக்ரஜாய	,,	அபாமார்க	,,	,,
கஜகர்ணகாய	,,	துளஸீ	,,	,,
ஏகதந்தாய	,,	சூத	,,	,,
விகடாய	,,	கரவீர	,,	,,
பின்ன தந்தாய	,,	விஷ்ணுக்ராந்த	,,	,,
வடவே	,,	தாடிமீ	,,	,,
த்விரதானனாய	,,	ஆமலக	,,	,,
பால சந்த்ராய	,,	மருவக	,,	,,
ஹேரம்பாய	,,	ஸிந்தூர	,,	,,
ஶூர்பகர்ணாய	,,	ஜாஜீ	,,	,,
ஸுராக்ரஜாய	,,	கந்தலீ	,,	,,
இபவக்த்ராய	,,	ஶமீ	,,	,,
விநாயகாய	,,	ப்ருங்கராஜ	,,	,,
ஸுரபூஜிதாய	,,	அர்ஜுன	,,	,,
அகிலாய	,,	அர்க்க	,,	,,
ஸ்ரீகணேஶ்வராய	,,	ஏகவிம்ஶதிபத்ரை:	,,	

ஏகவிம்ஶதி புஷ்பபூஜா

பஞ்சாஸ்ய	கணபதயே	நம:	ஜாஜீ	புஷ்பம்	பூஜயாமி
கணுனும்	,,	,,	ஸாவந்திக	,,	,,
தீர	,,	,,	சம்பக	,,	,,
விஷ்வக்ஸேன	,,	,,	வகுள	,,	,,
ஆமோத	,,	,,	பாடலீ	,,	,,
ப்ரமத	,,	,,	புன்னாக	,,	,,
ருத்ர	,,	,,	த்ரோண	,,	,,
வித்யா	,,	,,	ரஸால	,,	,,
விக்ன	,,	,,	அம்ருணள	,,	,,
துரித	,,	,,	கல்ஹார	,,	,,
பக்தவத்ஸல	,,	,,	கமல	,,	,,
காமிதார்த்த ப்ரத	,,	,,	மல்லிகா	,,	,,
ஸம்மோஹ	,,	,,	துர்தூர	,,	,,
விஷ்ணு	,,	,,	ஸம்யாக	,,	,,
ஈஶாஸ்ய	,,	,,	அர்க	,,	,,
கஜாஸ்ய	,,	,,	கரவீர	,,	,,
ஸர்வஸித்தி	,,	,,	பில்வ	,,	,,
வீர	,,	,,	மந்தார	,,	,,
கந்தர்ப	,,	,,	கேதகீ	,,	,,
உச்சிஷ்ட	,,	,,	பாரிஜாத	,,	,,
ப்ரஹ்ம	,,	,,	தாடிமீ	,,	,,

ஏகவிம்ஸதி தூர்வாயுக்ம பூஜா

(தூர்வாயுக்மம் பூஜயாமி என்று ஒவ்வொன்றிற்கும் சேர்த்துக்கொள்ளவும்.)

கணாதிபாய	நம:	கபிலவர்ணாய	நம:
பாஸாங்குஸதராய	,,	ப்ரஹ்மசாரிணே	,,
ஆகு வாஹனாய	,,	மோதகஹஸ்தாய	,,
விநாயகாய	,,	ஸுரஸ்ரேஷ்டாய	,,
ஈஸபுத்ராய	,,	கஜநாஸிகாய	,,
ஸர்வஸித்திப்ரதாய	,,	கபித்தபல ப்ரியாய	,,
ஏகதந்தாய	,,	கஜமுகாய	,,
இபவக்த்ராய	,,	ஸுப்ரஸன்னாய	,,
மூஷகவாஹநாய	,,	ஸுராக்ரஜாய	,,
குமாரகுரவே	,,	உமாபுத்ராய	,,

ஸ்கந்த ப்ரியாய நம: தூர்வாயுக்மம் பூஜயாமி

(அஷ்டோத்தர அர்ச்சனை)

தஸாங்கம் குக்குலோ பேதம் ஸுகந்தம்ச மனோஹரம்
தூபம் தாஸ்யாமி தேவேஸ க்ருஹாணத்வம் கஜானன.
(தூபமாக்ராபயாமி)

ஸாஜ்யம் த்ரிவர்தி ஸம்யுக்தம் வஹ்னினா யோஜிதம் மயா
க்ருஹாண மங்களம் தீபம் ஈஸபுத்ர நமோஸ்து தே
(தீபம் ஸமர்ப்பயாமி)

நைவேத்யம் ஷட்ரஸோ பேதம் பல லட்டுக மோதகான்
பக்ஷ்யம் போஜ்யம்ச லேஹ்யம்ச க்ருஹாண கணாதிப.
(ஒவ்வொன்றிலும் 21 எடுத்துவைத்து நிவேதனம் செய்யவும்)
(ஆசமநீயம் ஸமர்ப்பயாமி)

பாநீயம் பாவனம் ஸ்ரேஷ்டம் கங்காதி ஸரிதாஹ்ருதம்
ஹஸ்தப்ரக்ஷாளனார்த்தம் த்வம் ஸங்க்ருஹாண கணாதிப.
(ஹஸ்த ப்ரக்ஷாளனம் ஸமர்ப்பயாமி)

பூகிபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம்
கர்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம்.
(தாம்பூலம் ஸமர்ப்பயாமி)

நீராஜனம் ஸுமாங்கள்யம் ஸர்வமங்கள காரணம்
க்ருஹாண பராபக்த்யா அர்பிதம்தே விநாயக.
(நீராஜனம் ஸமர்ப்பயாமி)
(ஆசமநீயம்)

ஜாஜீ சம்பக புன்னாக மல்லிகா வகுளாதிபி:
புஷ்பாஞ்ஜலிம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண த்விரதானன.

(புஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்பயாமி)
(வேத மந்த்ரம் - யோபாம் புஷ்பம் வேத)

யானி கானிச பாபானி ஜன்மாந்த்ர க்ருதானிச
தானிதானி விநஶ்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே
ப்ரதக்ஷிணம் கரிஷ்யாமி ஸததம் மோதக ப்ரிய
மத்விக்னம் ஹரமே ஶீக்ரம் பக்தானும் இஷ்டதாயக
ஆகுவாஹன தேவேஶ விஶ்வ வ்யாபின் கஜானன
ப்ரதக்ஷிணம் கரோமித்வாம் ஸர்வைஶ்யர்ய ப்ரதோபவ.
(ப்ரதக்ஷிண நமஸ்காரம்)

நமோநமோ கணேஶாய நமஸ்தே விஶ்வரூபிணே
நிர்விக்னம் குரு மே தேவ நமாமி த்வாம் கஜானன.
அகஜானன பத்மார்கம் கஜானனம் அஹர்நிஶம்
அநேகதம் தம்பக்தானும் ஏகதந்தம் உபாஸ்மஹே.
நமஸ்தே பின்ன தந்தாய நமஸ்தே ஹரஸூனவே
மமாபீஷ்ட ப்ரதோதேவ விநாயக நமோஸ்து தே.
(நமஸ்காரம் செய்யவும்)

ப்ரஸீத தேவ தேவேஶ ப்ரஸீத கணநாயக
ஈப்ஸிதம் மே வரம் தேஹி பரத்ரச பராங்கதிம்
விநாயக வரம்தேஹி ஸததம் மோதக ப்ரிய
நிர்விக்னம் குருமே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா.
(ப்ரார்த்தனை)

ஸ்வர்ணபுங்க ஸமாயுக்தம் முக்தாஜால ஸமன்விதம்
ஶ்வேத பட்டாதபத்ரம் வ: ப்ரததாமி கணாதிப.
(குடை) (ஆதபத்ரம் ஸமர்ப்பயாமி)

வஜ்ரவைடூர்ய கசிதம் ஶரச்சந்த்ர ஸமப்ரபம்
சமரீ ம்ருக வாலவ்யம் சாமரத்வம் க்ருஹாணபோ.
(சாமரம் ஸமர்ப்பயாமி)

உஶீர நிர்மிதம் தேவ வ்யஜனம் ஶ்வேத ஶாந்தயே
ப்ரததாமி கணாத்யக்ஷ ஸந்துஷ்டோ பவஸர்வதா.
(வ்யஜனம் - விசிறி - ஸமர்ப்பயாமி)

ஆந்தோளிகாம் ஸமர்ப்பயாமி
ஸமஸ்த ராஜோபசாரான் ஸமர்ப்பயாமி

(கையில் அக்ஷதை பால் இவைகளுடன் மும்மூன்று முறை அர்க்யம் கொடுக்கவும்)

அர்க்யம் க்ருஹாண ஹேரம்ப ஸர்வப்ரத விநாயக
கந்தபுஷ்பாக்ஷதைர்யுக்தம் பக்த்யா தத்தம் மயா ப்ரபோ.
(விக்நேஸ்வராய நம: இதமர்க்யம்—3 முறை)

நமஸ்துப்யம் கணேஸாய நமஸ்தே விக்னநாயக
புனரர்க்யம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண கணநாயக
(விக்னேஸ்வராய நம: இதமர்க்யம்)

நமஸ்தே பின்னதந்தாய நமஸ்தே ஹரஸூனவே
இதமர்க்யம் ப்ரதாஸ்யாமி ஸங்க்ருஹாண கணாதிப.
(விக்னேஸ்வராய நம: இதமர்க்யம்)

கௌர்யம் கமலஸம்பூத ஜ்யேஷ்ட ஸ்வாமின் விநாயக
கணேஸ்வர க்ருஹாணார்க்யம் கஜானன நமோஸ்துதே.
(விக்னேஸ்வராய நம: இதமர்க்யம்)

அநேன அர்க்ய ப்ரதானேன பகவான் ஸர்வாத்மக:
ஸர்வம் ஸ்ரீமஹா கணபதி: ப்ரீயதாம்.

உபாயனம்: அத்ய பூர்வோக்த ஏவங்குண விஸேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் சதுர்த்யாம் ஸுபதிதௌ மஹா கணபதி ப்ரீத்யர்த்தம் மஹாகணபதி பூஜா ஸாங்கபல ஸித்யர்த்தம் உபாயனதானம் ப்ராஹ்மண பூஜாம்ச கரிஷ்யே— (என்று ஸங்கல்பம் செய்துகொண்டு) மஹாகணபதி ஸ்வரூபஸ்ய ப்ராஹ்மணஸ்ய இதமாஸனம்.

கணேஸ: ப்ரதிக்ருஹ்ணாது கணேஸோ வை ததாதிச
கணேஸஸ் தாரகோத்வாப்யாம் கணேஸாய நமோநம:

என்று சொல்லி ப்ராம்மணருக்கு உபாயன தானம் செய்யவும்.

யஸ்ய ஸ்ம்ருத்யா ச நாமோக்த்யா
தப: பூஜா க்ரியாதிஷு
ந்யூனம் ஸம்பூரணதாம் யாதி
ஸத்யோ வந்தே கஜானனம்.

{ அந்தந்த பூஜைக்கும் இந்த சுலோகம் சொல்லவும்.

(ஓம் தத் ஸத் ப்ருஹ்மார்ப்பண மஸ்து.)

ஸ்ரீ கணேச அஷ்டோத்தரம்

1. ஓம் கஜானநாய நம: 2. கணாத்யக்ஷாயநம: 3. விக்னராஜாய நம: 4. விநாயகாய நம: 5. த்வை மாதுராய நம: 6. த்விமுகாய நம: 7. ப்ரமுகாய நம: 8. ஸுமுகாய நம: 9. க்ருதினே நம: 10. ஸுப்ரதீபாய நம: 11. ஸுகநிதயே நம: 12. ஸுராத்யக்ஷாய நம: 13. ஸுராரிக்னே நம: 14. மஹாகணபதயே நம: 15. மான்யாய நம: 16. மஹாகாலாய நம: 17. மஹாபலாய நம: 18. ஹேரம்பாய நம: 19. லம்பஜடராய நம: 20. ஹ்ரஸ்வக்ரீவாய நம: 21.

1757
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

மஹோதராய நம: 22. மதோத்கடாயநம: 23. மஹாவீராய நம: 24. மந்த்ரிணே நம: 25. மங்களாய நம: 26. ஸுஸ்வராய நம: 27. ப்ரமதாய நம: 28. ப்ரதமாய நம: 29. ப்ராக்ஞாய நம: 30. விக்ந கர்த்தரே நம: 31. விச்வநேத்ரே நம: 32. விராட்பதயே நம: 33. ஸ்ரீபதயே நம: 34. வாக்பதயே நம: 35. ச்ருங்காரிணே நம: 36. ஆச்ரித வத்ஸலாய நம: 37. சிவப்ரியாய நம: 38. சீக்ர காரிணே நம: 39. சாச்வதாய நம: 40. பலாய நம: 41. பலோத்ததாய நம: 42. பவாத்மஜாய நம: 43. புராண புருஷாய நம: 44. பூஷ்ணே நம: 45. புஷ்க ரோக்ஷிப்த வாரிணே நம: 46. அக்ரகண்யாய நம: 47. அக்ரபூஜ்யாய நம: 48. அக்ர காமினே நம: 49. மந்த்ரக்ருதே நம: 50. சாமீகர ப்ரபாய நம: 51. ஸர்வஸ்மை நம: 52. ஸர்வோபாஸ் யாய நம: 53. ஸர்வகர்த்ரே நம: 54. ஸர்வ நேத்ரே நம: 55. ஸர்வ ஸித்தி ப்ரதாய நம: 56. ஸர்வ ஸித்தயே நம: 57. பஞ்சஹஸ்தாய நம: 58. பார்வதீ நந்தனாய நம: 59. ப்ரபவே நம: 60. குமாரகுரவே நம: 61. அக்ஷோப்யாய நம: 62. குஞ்ஜராஸுர பஞ்ஜனாய நம: 63. ப்ரமோதாய நம: 64. மோதகப்ரியாய நம: 65. காந்திமதே நம: 66. த்ருதிமதே நம; 67. காமினே நம: 68. கபித்த பனஸப்ரியாய நம: 69. ப்ரஹ்மசாரிணே நம: 70. ப்ரஹ்ம ரூபிணே நம: 71. ப்ரும்ம வித்யாதிதான புவே நம: 72. ஜிஷ்ணவே நம: 73. மஹேசாய நம: 74. விசதாங்காய நம: 75. மணிகிங்கிணி மேகலாய நம: 76. ஸமஸ்த தேவதா மூர்த்தயே நம: 77. ஸஹிஷ்ணவே நம: 78. ஸததோத்திதாய நம; 79. விகாதகாரிணே நம: 80. விஷ்வக்ர த்ருசே நம: 81. விச்வரக்ஷாக்ருதே நம: 82. கல்யாணகுரவே நம: 83. ஜிஷ்ணவே நம: 84. விஷ்ணுப்ரியாய நம: 85. பக்தஜீவிதாய நம: 86. ஜிதமன்மதாய நம: 87. ஐச்வர்ய காரணாய நம: 88. ஜ்யாயஸே நம: 89. யக்ஷகின்னர ஸேவிதாய நம: 90 கங்காஸுதாய நம: 91. கணாதீசாய நம: 92. கம்பீரநினதாய நம: 93. வடவே நம: 94. அபீஷ்டவரதாய நம: 95. ஜ்யோதிஷே நம: 96. பக்தநிதயே நம: 97. பாவகம்யாய நம: 98. மங்களப்ரதாய நம: 99. அவ்யக்தாய நம: 100 அப்ராக்ருத பராக்ரமாய நம: 101. ஸத்யதர்மிணே நம: 102. ஸக்யை நம: 103. உன்மத்தவேஷாய நம: 104. வரஜிதே நம: 105. ஸமஸ்தஜகதாதாராய நம: 106. ஸர்வைச்வர்ய ப்ரதாய நம: 107. ஆக்ராந்த ஸதஸத்ப்ரபவே நம: 108. விக்னேச்வராய நம:

मुखं वह्निः पादौ हरिरपि विधाता प्रजननं
रविर्नेत्रे चन्द्रो हृदयमपि कामोऽस्य मदनः ।
करौ शक्रः कट्यामवनिरुदरं भाति दशनं
गणेशस्यासन्वै क्रतुमयवपुश्चैव सकलं ॥

முகம் வஹ்னி: பாதௌ ஹரிரபி விதாதா ப்ரஜனனம்
ரவிர் நேத்ரே சந்த்ரோ ஹ்ருதயமபி காமோஸ்ய மதன:
கரௌ ஶக்ர: கட்யாமவனிருதரம் பாதி தஶனம்
கணேஶஸ் யாஸன்வை க்ரதுமய வபுஶ்சைவ ஸகலம்.

(விநாயக விஶ்வரூபம்)

Printed by K. S. Krishnan at The Progressive Printers,
17, Coral Merchant Street, Madras & Published by Sri N. V. Subramanian,
"Vaidhika Dharma Vardhini," at 2/218 Thambu Chetty, St., G. T., Madras.

ஸ்ரீ கிருஷ்ண லீலை

மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

பதிவு எண் M 4948.] [वैदिक धर्म व

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

ஸ்ரீ விநாயகர்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY